
# வானவில்

# VAANAVIL

| இதழ் 113 | வைகாசி 2020 |
| --- | --- |
| ISSUE 113 | MAY 2020 |


# தமிழ் மக்களுக்கு தேவை ஆள் மாற்றமா அல்லது கொள்கை மாற்றமா?




தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விடுதலைப் புலிகள் சம்பந்தமாகவும், ஆயுதப் போராட்டம் சம்பந்தமாகவும் அண்மையில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி சம்பந்தமாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் வாதப்பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன.

சுமந்திரன் என்ன நோக்கத்துக்காக புலிகளையும் ஆயுதப் போராட்டத்தையும் விமர்சித்தார் என்பது ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் அவரை விமர்சிப்பவர்கள் இப்பொழுதும் புலிகளையும் ஆயுதப் போராட்டத்தையும் ஆதரிக்கிறார்களா என்ற கேள்வியும் எழுகிறது. அதாவது அவர்கள் இன்னமும் தனிநாடு காணுவதற்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட விரும்புகிறார்களா என்ற கேள்வியும் எழுகிறது.

சுமந்திரன் சொந்தக் கட்சியான தமிழரசுக் கட்சியையும், அது தலைமைதாங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் 'தூய்மைப்படுத்தும்' வேலையில் ஈடுபட விரும்புவதாகத் தெரிகிறது. அதாவது தான் சார்ந்திருக்கும் அணி தமிழீழ தனிநாட்டையோ, அதற்கான ஆயுதப் போராட்டத்தையோ ஆதரிக்கவில்லை என்பதை நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு மட்டுமின்றி, சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் காட்டுவது அவசியம் என சுமந்திரன் நினைக்கிறார்.

2009இல் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட பிறகு தனிநாட்டுக் கோரிக்கையோ அதற்கான ஆயுதப் போராட்டமோ பெரும் பின்னடைவுக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது. சாதாரண தமிழ் பொதுமக்களும் அந்த நிலை திரும்ப ஏற்படுவதை ஏற்கும் மனநிலையில் இல்லை. எனவே இனிமேல் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செய்ய விரும்பும் எவரும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் முடியுமான அளவுக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதை நோக்கியே வேலை செய்ய முடியும்.

இதன் அடிப்படையில் வேலை செய்வதானால் முதலில் சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் தம்மைப்பற்றி ஒரு நம்பிக்கையை உருவாக்க வேண்டும். அத்தகைய ஒரு நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் இன்று இருக்கும் ஒரேயொரு கட்சி டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மட்டுமே. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட மற்றைய கட்சிகள் எல்லாவற்றையும் சிங்கள மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையே காணப்படுகிறது.

டக்ளஸ் தேவானந்தா சிங்கள மக்கள் மத்தியில் தனது கட்சியைப் பற்றி நம்பிக்கையை உருவாக்கியதிற்கு அவர் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டதும், புலிகளை இறுதிவரை எதிர்த்து நின்றதும் மட்டும் காரணங்களல்ல. அவர் சாத்தியமான நேரங்களில் அரசாங்கங்களுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றதுடன், தனது பதவிகளுக்கூடாக 30 வருடப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முடியுமான உதவிகளைச் செய்ததுமாகும்.

அவரது கட்சியுடன் ஒப்பிடுகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல கட்சிகளைக் கொண்ட பெரிய கூட்டணியாகவும், நாடாளுமன்றத்தில் பல ஆசனங்களைக் கொண்டதாகவும் இருந்த போதிலும், கூட்டமைப்பால் இத்தனை வருட காலத்தில் ஈ.பி.டி.பி. கட்சி சாதித்ததில் 10 வீதத்தைத்தன்னும் சாதிக்க முடியவில்லை. இதன் காரணமாக சாதாரண தமிழ் பொதுமக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நம்பிக்கை

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இந்தியப் புலம்பெயர் தொழிலாளர்களின் தொடரும் அவலம்

**கொ**ரோனா வைரஸ் கோவிட் 19 ஆல் நாளுக்குநாள் மரணித்துக் கொண்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை 3.58 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. இது ஒருபுறமிருக்க, தொற்றுப்பரவலைத் தடுப்பதற்காக உலகிலுள்ள பல நாடுகளில் அமுலுக்கு வந்த ஊரடங்கு அல்லது பொது முடக்கம் காரணமாக எல்லாதரப்பட்ட மக்களும் இன்னமும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட வண்ணமேயுள்ளார்கள். எனினும் மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடுகையில், வறிய, மூன்றாம் உலக நாடுகளில் ஊரடங்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகள் பன்மடங்கானது. இதன் ஒரு பகுதியே எங்கள் அனைவருக்கும் ஊடகங்களின் வாயிலாக செய்திகளாகத் தெரியவந்து கொண்டிருக்கின்றன.

இந்தியா மார்ச் 24ந் திகதி நாடு தழுவிய ஊரடங்கை 21 நாட்களுக்கு அறிவித்தது. இப்போது 4வது கட்டமாக மே 31ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு அமுலில் வந்ததைத் தொடர்ந்து மாநிலங்களின் எல்லைகள் மூடப்பட்டு போக்குவரத்துகள் முற்றாக முடக்கப்பட்டன. திடீரென்று ஊரடங்கை அறிவிக்கும்போது, இந்திய அரசு ஒரு மாநிலத்திலிருந்து, புலம்பெயர்ந்து இன்னொரு மாநிலத்திற்கு வந்து வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களின் நிலைபற்றிக் கிஞ்சித்தளவும் சிந்திக்கவில்லை. சகலதுமே மூடப்பட்டிருப்பதால், தற்போது வருமானமுமின்றி, இவர்கள் சொந்த ஊருக்கும் திரும்ப முடியால் தவிக்கிறார்கள்.

28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களைக் கொண்ட இந்தியாவின் மக்கள் சனத்தொகை, 135 கோடி. இந்தியாவின் ஆகக்கூடிய நீளமும் அகலமும் முறையே 3200, 2900 கிலோ மீற்றர்கள். இந்தியாவில் புலம்பெயர் தொழிலாளர்கள் 4 கோடியென அதிகாரபூர்வ கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. எனினும் அன்றாடக் கூலிகளையும் சேர்த்தால் 10 கோடி வரையில் இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாத்திரம் 12 இலட்சம் பதியப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் இருக்கிறார்களென புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் அதிகமானோர் உற்பத்தித் துறையிலும், ஆடைகள் நிறுவனங்களிலும், கட்டுமான வேலைகளிலும் பணியாற்றுகிறார்கள்.

போக்குவரத்து சேவைகள் முடக்கப்பட்டதின் காரணமாக, இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் சொந்த ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு நடந்து செல்பவர்களின் பரிதாபத்தினைப் பார்த்து, ஒவ்வொரு ஊர்களையும் அவர்கள் வந்தடையும் போதும் அந்த ஊர்மக்கள் அவர்களுக்கு உணவுகளை வழங்குகின்றனர். வீதியால் செல்லும் வாகனங்களை மறித்தும் அவர்கள் ஏறிச் செல்கின்றனர். ஆங்காங்கே மனிதாபிமானமும் வசதியுமுள்ள பிரமுகர்கள், அவர்கள் இளைப்பாற வசதிகளையும், சொந்த ஊர் போக பஸ்களையும் ஏற்பாடு செய்து கொடுக்கின்றனர்.

கால் நடையாக நடந்தவர்களில் பலர் பசியால் இறந்தார்கள். பகலிலும் இரவிலும் நடந்து, சோர்ந்து, களைத்து அதிகாலையில் ரயில் பாதையில் தூங்கும்பேரது ரயில் அவர்கள் மீது ஏறியுள்ளது. தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற வாகனங்களுக்கு விபத்துகள் நேர்ந்தும் பலர் இறந்துள்ளனர். ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து இதுவரை நடந்த வீதி விபத்துகளில் குறைந்தது 196 புலம்பெயர் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர், 866 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று Save Life Foundation இன் அண்மைய அறிக்கையொன்று கூறுகின்றது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் துயரம் தோய்ந்த கால் நடைப்பயணம் தேசிய அரசியலில் ஏற்படுத்திய அழுத்தம் காரணமாக விசேட ரயில்கள் மூலம் அவர்களை அனுப்ப இந்திய மத்திய அரசு முடிவெடுத்தது. ஆனால் அவர்களே ரயில் பயணக்கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென அரசு அறிவித்தது. ஊரடங்கினால் வேலையின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களிடம் பயணக் கட்டணம் வசூலிப்பது எந்தவிதத்தில் நியாயமாகும்? இதனால் காங்கிரஸ் கட்சி ரயில் கட்டணத்தை பொறுப்பேற்பதாக அறிவித்து, மோடியின் அரசுக்கு முகத்தில் கரி பூசியது.

மே 1ந் திகதியிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிச் செல்வதற்கு விசேட ரயில் சேவைகள் ஈடுபட்டு வருகின்றன. ரயில்களில் பயணம் செய்யலாம், ஆனால் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? ரயில் நிலையங்களிலுள்ள சிறியரக உணவகங்களை பயணிகள் சூறையாடியதாகவும், பயணிகள் பலர் பட்டினியால் இறப்பதாகவும் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. எனினும் அவ்வப்போது ஈடுபடுத்தப்பப்படும் ரயில் சேவைகளை எதிர்பாத்திராது, தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு இன்னமும் நடந்தும் சைக்கிளிலும் சென்ற வண்ணமேயுள்ளனர். 15 வயதான ஜோதிகுமாரி டெல்லிக்கு அருகிலுள்ள கூர்கானிலிருந்து, காலில் காயமுற்ற தனது தந்தையை பின்னால் இருத்தி சைக்கிளில் 7 நாட்களாகப் பயணம் செய்து, 1200 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பீஹார் மாநிலத்தின் தர்பங்கா என்ற தங்களது சொந்த ஊரை மே 21ந் திகதி வந்தடைந்துள்ளார்.

இந்திய உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நடந்து செல்லும் அவலநிலை வழக்கை பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. புலம்பெயர் தொழிலாளர்கள் நடந்து செல்லும் நிலை ஏற்பட்டிருப்பதற்கு மத்திய, மாநில அரசுகளே காரணம் என்று உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. ஊரடங்கு காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் சந்தித்துள்ள பிரச்சனை குறித்து தாமாக முன்வந்து விசாரணை செய்த நீதிமன்றம், இது குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் நிகழ்ந்த முதலாவது மிகப் பெரிய மனித பேரவலம் இதுவெனக் கூறப்படுகின்றது. ஆயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் அன்றாடக் கூலிகள் 1500 – 1800 கிலோ மீற்றர் தூரத்தைக் கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள் என்றால், இவ்வளவு பெரிய மனித செலவில் இந்தியா ஒரு சோகத்தை கண்டது இதுவே முதல் முறையாகும். மோடி அரசின் தொழிலாளர்கள் மீதான பாராமுகத்தை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

## வரலாற்றைத் திரும்பிப் பார்த்தல்:

# 1970 ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு!

சுதந்திரத்துக்கு பிந்தைய இலங்கையின் வரலாற்றில் 1970ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும். அதற்குக் காரணம் அந்த ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'ஐக்கிய முன்னணி' (United Front) மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஐக்கிய முன்னணியில் சிறீமாவோவின் சொந்தக் கட்சியான, அவரது கணவரான எஸ்.டபிள்யு.ஆர்.பண்டாரநாயக்க 1951இல் ஆரம்பித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன், இலங்கையின் பழமை வாய்ந்த இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகித்தன.




1970இல் ஐக்கிய முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றி 2020 மே மாதத்துடன் 50 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. பிரித்தானிய முதலாளித்துவ 'வெஸ்ற்மின்ஸ்ரர்' பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றும் இலங்கையில் 30 வருட போர் நடைபெற்ற காலத்தில் கூட பெரும்பாலும் 5 வருடத்துக்கு ஒருமுறை தவறாது தேர்தல் நடத்தப்பட்டு வந்துள்ளது. அது இலங்கை ஜனநாயகத்தின் சிறப்பம்சம். இருப்பினும் இந்த 1970ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு மேலும் ஒரு சிறப்பு அம்சம் இருக்கின்றது.

அது என்னவென்றால், இலங்கையில் முதன்முதலாக இரண்டு கட்சி ஆட்சி முறையை நிலைநிறுத்திய, முதன்முதலாக பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றிய 1956 பொதுத் தேர்தலின் போது, பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சி பிலிப் குணவர்த்தன தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுனவுடன் (மக்கள் ஐக்கிய முன்னணி) இணைந்தே ஆட்சியைக் கைப்பற்றியது. மற்றைய இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் பண்டாரநாயக்க அரசாங்கத்தின் ஏகாதிபத்திய விரோத, மக்கள் நலத் திட்டங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவளித்தனவே தவிர அரசில் சேரவில்லை.

1957இல் பண்டாரநாயக்க பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மனைவி சிறீமாவோ கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் தலைமையில் 1960 பொதுத் தேர்தலில் கட்சி போட்டியிட்டது. அந்த ஆண்டு இருதடவைகள் தேர்தல் நடந்தது. மார்ச் 19ந் திகதி நடந்த தேர்தலில் எக்கட்சியாலும் ஆட்சியமைக்க முடியவில்லை. ஜூலை 20ந் திகதி நடந்த தேர்தலில் சிறீ.சு,கட்சி 75 ஆசனங்களுடன் தேர்தலில் வெற்றி பெற்றாலும், ஆட்சியமைப்பதற்கு ஓர் ஆசனம் போதாமலிருந்தது. எனினும் அதிக ஆசனங்களை வென்ற கட்சியென்ற அடிப்படையில், சிறீமாவோ உலகின் முதல் பெண் பிரதமராக பெருமையுடன் பதவியேற்றார். பிரதமர் பதவி பொறுப்பெற்றிருந்தாலும் அவர் அனுபவம் குறைந்தவராகவே இருந்தார். அத்துடன் கட்சிக்குள்ளும் அமைச்சரவையிலும் சி.பி.டி.சில்வா போன்றவர்களின் தலைமையில் வலதுசாரி அணியொன்று பலமாகவும் இருந்தது. அந்த அணி சிறீமாவோ தனது கணவர் பண்டாரநாயக்கவின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கையைத் தொடர்வதற்கும் இடையூறாக இருந்தது.

### கே.மாணிக்கவாசகர்

மறுபக்கத்தில், இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன என்பன இணைந்து 'இடதுசாரி முன்னணி' என்ற பெயரில், மொத்தம் 19 ஆசனங்களுடன் மிகப்பெரிய ஐக்கிய முன்னணி ஒன்றையும் உருவாக்கியிருந்தன. இந்த முன்னணி இலங்கையில் இருக்கின்ற அனைத்து தொழிலாளி வர்க்கம் சார்பாக 21 கோரிக்கைகளை முன் வைத்து மாபெரும் போராட்டம் ஒன்றுக்கு தயாராகி வந்தது அந்தப் போராட்டம் நிகழ்ந்தால் அது 1953இல் நடைபெற்ற, நாட்டையே ஸ்தம்பிக்க வைத்த, புகழ்பெற்ற ஹர்த்தால் போராட்டத்தை ஒத்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலைமையில் சிறிமாவோ இருபக்க நெருக்கடியை எதிர்நோக்கினார். ஒரு பக்கம் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடி. மறுபக்கம் வெளியிலிருந்து இடதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடி. இதில் இடதுசாரிகள் கொடுக்கும் நெருக்கடியே உடனடி ஆபத்தாக இருந்ததால், முதலில் அதற்குத் தீர்வு காண்பதற்கு முயன்றார்.

அதன் பொருட்டு சிறீமாவோ மிகச் சாதுரியமாகச் செயற்பட்டு 1964 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சியை இடதுசாரி ஐக்கிய முன்னணியிலிருந்து பிரித்தெடுத்து அந்தக் கட்சியின் தலைவரும், பொருளாதாரத்தில் இரட்டைக் கலாநிதி பெற்றவருமான டாக்டர் என்.எம்.பெரேராவுக்கு தனது அரசில் மிக முக்கியமான நிதியமைச்சு பொறுப்பை வழங்கினார். அதன் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையிலான உறவு படிப்படியாக அதிகரித்து வந்தது. அதன் தொடர்ச்சியே 1970 தேர்தலின் போது மூன்று கட்சிகளும் கூட்டணி அமைத்துப்

போட்டியிடவும், தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறவும் வழிவகுத்தது.

1970இல் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முதல் முறையாக இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் (லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி) அங்கம் வகித்ததால் அந்த அரசாங்கம் பல முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. அந்த நடவடிக்கைகள் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அவற்றின் உள்ளூர் பிரதிநிதிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ் பிற்போக்கு கட்சிகளுக்கும் உவப்பானதாக இருக்கவில்லை. எனவே அவை பல எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சீர்குலைவு வேலைகளை மேற்கொள்வதற்கும் தருணம் பார்த்துக் காத்திருந்தன.

ஆனால் அரசுக்கு எதிரான முதல் நடவடிக்கை ஆயுதக் கிளர்ச்சி என்ற வடிவத்தில் இடதுசாரிப் போர்வையில் இருந்த ஜே.வி.பியிடம் இருந்து உருவானது. மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உருவான அரசாங்கத்தை அதன் ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்பே கவிழ்ப்பதற்கு 1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பித்தது. ஆனால் அந்தக் கிளர்ச்சிக்கு மக்களின் ஆதரவு இல்லாமையினால் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. கிளர்ச்சியை முறியடிப்பதற்கு இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான இந்தியா, சோவியத் யூனியன், சீனா என்பன பல வழிகளிலும் ஒத்தாசை வழங்கின. ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னணியில் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும், ஐ.தே.கவும் இருந்தது பின்னர் நிரூபணமானது.

இந்த அரசாங்கத்திலும் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேராதான் நிதியமைச்சராக இருந்தார். அவர் பெரும் தனவந்தர்களிடம் இருந்த கறுப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்காக 100 மற்றும் 50 ரூபா நாணயத் தாள்களை திடீரென செல்லுபடியற்றதாக்கி ஒரு 'புரட்சி' செய்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தளவு கறுப்புப் பணம் வெளிவரவில்லை. காரணம் என்னவென்றால் பணம் பதுக்கி வைத்திருந்தவர்கள் முன்னரே இதை அறிந்து கொண்டு அவற்றை வங்கியில் வேறு பெயர்களில் வைப்புச் செய்தும், அந்தத் தாள்களை 10 மற்றும் 5 ரூபா தாள்களாக மாற்றியும் அதிலிருந்து தப்பிவிட்டனர். கிளிநொச்சியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த முன்னாள் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே தன்னிடமிருந்த ஒருதொகை பணத்தை தனது சங்கத்தில் கொடுத்து மாற்றிச் சென்றார் என்றால், தென்னிலங்கையில் நிலவரம் எப்படி இருந்திருக்கும் என எண்ணிப் பார்க்கலாம். இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிறிய தொகை 100 மற்றும் 50 ரூபா தாள்களை வைத்திருந்த மத்தியதர வர்க்கத்தினர்தான்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்த மிகப்பெரும் சாதனைகளில் தலையாயது 1972இல் புதிய குடியரசு அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வந்ததாகும். அதுவரை காலமும் பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் அவர்கள் நியமித்த சோல்பரி பிரபு என்பவர் வரைந்த அரசியல் சாசனம்தான் நடைமுறையில் இருந்து வந்தது. ஒரு ஏகாதிபத்திய நாடு தனது காலனி நாடு ஒன்றுக்கு வரையும் அரசியல் சாசனம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்த அடிமைச் சாசனத்தை மாற்றியமைக்க ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவு செய்தது.

அதன்படி அதுவரை காலமும் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் ஒரு நாடாக இருந்து வந்த இலங்கை அதிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு தன்னை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்து கொண்டது. இலங்கையின் பெயர் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என மாற்றப்பட்டது. ஆங்கிலத்தில் இலங்கைக்கு சிலோன் (Ceylon) என பிரித்தானியர் வைத்த பெயர் சிறீலங்கா என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இலங்கையை குடியரசாக்கியது பிரித்தானியர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர்கள் அதற்கு எதிராக தமது செல்லப் பிள்ளைகளான பிற்போக்கு தமிழ் இனவாதிகளைத் தூண்டிவிட்டனர். அதன் அடிப்படையில் தமிழரசுக் கட்சி சட்டத்தை மீறி குடியரசு எதிர்ப்புப் போராட்டங்களை தமிழ் பிரதேசம் எங்கும் தொடங்கி நடத்தியது. தமது போராட்டத்துக்கு நியாயம் கற்பிப்பதற்காக அவர்கள் சொன்ன காரணம், முன்னைய சோல்பரி அரசியல் சாசனத்தில் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக சேர்க்கப்பட்டிருந்த 28ஆவது சரத்து புதிய குடியரசு அரசியல் சாசனத்தில் நீக்கப்பட்டுவிட்டதுடன், புதிய சாசனத்தில் பௌத்த மதத்துக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டுவிட்டது என்பதுமாகும். உண்மையில் இது போராட்டத்துக்குப் பதிலாகப் பேசித் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினை.

இந்தப் பிரச்சினையுடன் இன்னொரு பிரச்சினையும் தமிழ் இனவாதிகளுக்குத் தீனி போட்டது. அதாவது, அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையொன்றை அறிமுகப்படுத்தியது. இந்த முறை இன அடிப்படையிலானது என ஆட்சேபம் தெரிவித்து தமிழரசுக் கட்சி தமிழ் மாணவர்களை தூண்டிவிட்டு அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியது. ஆனால் அரசாங்கம் இதில் உள்ள தவறுகளை அமைச்சர் பீட்டர் கெனமன் தலைமையிலான குழு ஒன்றின் மூலம் ஆராய்ந்து களைந்துவிட்டது. இந்த தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தபோது கல்வி அமைச்சராக இருந்தவர் தமிழ் இனத்தை விட சிறுபான்மை இனமான முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த பதியுதீன் மஹ்மத் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் தமிழரசுக் கட்சி தனது அந்தரங்க நோக்கத்துக்கான போராட்டத்தை கைவிடவில்லை. தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புகளை உருவாக்கி தமிழ் இனவாதத் தீயை பட்டிதொட்டி எங்கும் விசிறிப் பரப்பியது. தரப்படுத்தல் முறையை எதிர்ப்பதற்காக அதைக் கொண்டு வந்த கல்வியமைச்சர் பதியுதீனை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு அவரை இனவாத அடிப்படையில் "முக்கால் மந்திரி மஹ்முத் ஒழிக" என்ற கோசம் எழுப்பப்பட்டது. குடியரசு எதிர்ப்பு, தரப்படுத்தல் எதிர்ப்பு என்ற இரட்டைக் குழல் துப்பாக்கி மூலம்தான் தமிழீழப் போராட்டத்துக்கு கால்கோள் இடப்பட்டது.

பிற்போக்கு சக்திகள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்கு சிங்கள இனத்திலிருந்து இடதுசாரிப் போர்வையில் தேர்ந்தெடுத்த ஜே.வி.பியின் போராட்டம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டாலும், தமிழ் இனத்திலிருந்து வலதுசாரி சக்திகள் மூலம் உருவாக்கப்பட்ட இனவாதப் போராட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. அது 30 வருட உள்நாட்டுப் போராக உருமாறி பலத்த அழிவுகளுக்குப் பின்னர் 2009இல்தான் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்த இன்னொரு முக்கியமான சாதனை மலைநாட்டிலிருந்த வெளிநாட்டு – உள்நாட்டு தனியார் கம்பனிகளுக்குச் சொந்தமான 502 தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்கியதும், காணி சீர்திருத்தத்தின் மூலம் காணி உச்ச வரம்பை 50 ஏக்கர் ஆக்கியதுமாகும். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் பெருமளவு தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் மூலம் கிடைத்து வந்தது. இலங்கை ஈட்டிய அந்நிய செலாவணியில் அதன்

பங்கு 90 வீதமாகும்.

தேசியமயம் என்பது இலங்கைக்கோ ஏனைய புதிதாகச் சுதந்திரம் அடைந்த நாடுகளுக்கோ புதிய விடயம் அல்ல. இலங்கையைப் பொறுத்தவரை 1956இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தது முதல் அந்நியருக்குச் சொந்தமான நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டு வந்துள்ளன. அது அவரது மனைவி சிறீமாவோவின் 1960 – 64 ஆண்டுப் பதவிக் காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், துறைமுகம், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், பெற்றோலியம், தனியார் பாடசாலைகள், பஸ் கொம்பனிகள் உட்பட பல நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றியே பெருந்தோட்டங்களும் தேசியமயமாக்கப்பட்டன. (1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட பெருந்தோட்டங்களை மீண்டும் தனியார்துறைக்கு தாரை வார்த்தது)

ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடன் இருந்த, வரலாறு விட்டுச் சென்ற இரண்டு பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாத் தீர்வு காணப்பட்டது. அதில் ஒன்று இலங்கையிலுள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சினை. (இவர்களது பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் 1948இல் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் பறித்து அந்த மக்களை நாடற்றவர்களாக்கியிருந்தது)

ஏற்கெனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக 1964 ஒக்ரோபர் 30இல் இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா ஒரு குறிப்பிட்ட தொகை இந்திய வம்சாவழி மக்களை ஏற்றுக் கொண்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக மிகுதியாக இருந்த மக்கள் சம்பந்தமாக 1974 யூன் 28இல் இலங்கைப் பிரதமர் சிறீமாவோவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்திக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி நாடற்றவர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்பட்டது.

அது தவிர, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்திருந்த மனிதர்கள் வசிக்காத, அதேநேரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கச்சதீவு விவகாரத்துக்கும் சிறீமாவோ – இந்திரா பேச்சுவார்த்தையின் மூலம் 1974இல் இறுதித் தீர்வு காணப்பட்டது. இரு நாடுகளும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கச்சதீவு மீதான இலங்கையின் ஆதிபத்தியம் (உரிமை) உறுதி செய்யப்பட்டது. இந்த இரு ஒப்பந்தங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் இந்தியத் தலைமையுடன் சிறீமாவோ பண்டாரநாயக்க கொண்டிருந்த ஆழமான நட்புணர்வும், அவரது இராஜதந்திரமும் முக்கிய பங்கு வகித்தன என்றால் அது மிகையாகாது. அதேநேரத்தில் அமெரிக்கா சார்பாகவும், தமிழர் விரோதமாகவும் இருந்த ஜே.ஆர்ஜெயவர்த்தனவுக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் சிறீமாவோ இந்தியத் தலைவர்களுடன் செய்த ஒப்பந்தங்களிலிருந்து தன்மையில் மாறுபட்டது என்பதை இங்கு அவதானிக்க வேண்டும்.



ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் செய்த இன்னொரு முக்கியமான சாதனை பத்திரிகை ஏகபோகத்தை தகர்த்ததாகும். இலங்கையில் ஐ.தே.க. குடும்பத்தைச் சேர்ந்த டி.ஆர்.விஜேயவர்த்தனவினால் ஆரம்பிக்கப்பட்ட 'லேக்ஹவுஸ்' (ஏரிக்கரை) நிறுவனம் மும்மொழிகளிலும் தினசரி, வார இறுதி, வாராந்த, மாதாந்த அடிப்படையில் சுமார் 16 பத்திரிகைகளை நடத்தி வருகின்றது. இந்த நிறுவனம் கடந்த காலங்களில் அரசியலில் ஐ.தே.கவுக்கு ஆதரவாக பல அரசியல் பிரச்சாரங்களைச் செய்து வந்துள்ளது. அவை தேசத்துரோகமானவையாகவும், மக்கள் விரோதமானவையாகவும் இருந்தன. எனவே இந்த நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்தது. குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள் இந்தக் கோரிக்கையை விடுத்து வந்தன.

1960இல் பதவிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான மசோதா ஒன்றை 1964இல் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆனால் லேக்ஹவுஸ் நிறுவனம் சில ஆளும் கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கியதின் மூலம் அந்த மசோதா ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இதனால் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் பதவி விலகி புதிய தேர்தல் ஒன்றுக்கு வழிவிட வேண்டியதாயிற்று. அந்த தோல்வி அடைந்த முயற்சி ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1973 நொவம்பர் 28ஆம் திகதி கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்றின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் புகழ் ஈட்டித்தந்த இரண்டு நிகழ்வுகள் நடைபெற்றன. ஒன்று 1976ஆம் ஆண்டு ஒகஸ்ட் 16 முதல் 19 வரை கொழும்பில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் 5ஆவது உச்சி மாநாடாகும். 1961இல் யூகோஸ்லோவாக்கியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் உருவாக்கப்பட்ட அணிசேரா இயக்கத்தின் ஸ்தாபக நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அந்தக் கூட்டத்திலும் அப்போது இலங்கையின் பிரதமராக இருந்த சிறீமாவோ கலந்து கொண்டார். இலங்கையின் அந்தப் பங்களிப்பு காரணமாக 5ஆவது மாநாட்டை நடாத்தும் வாய்ப்பும் பெருமையும் இலங்கைக்குக் கிடைத்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இன்னொரு சர்வதேச சாதனை இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை ஐ.நாவில் கொண்டு வந்து 1973 டிசம்பர் 06இல் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றியதாகும். அதற்குக் காரணம், அந்தக் கட்டத்தில் வியட்நாமில் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அமெரிக்கா, டியாகோகார்சியாவில் இருந்த தனது இராணுவத் தளம் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்க முயன்று வந்தது. மறுபக்கத்தில், இந்திராகாந்தியின் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்த சோவியத் யூனியன் இந்தியாவுடன் சேர்ந்து 'ஆசிய கூட்டு பந்தோபஸ்து' என்ற போர்வையில் இந்து

சமுத்திரப் பிராந்தியத்தில் காலூன்ற முயன்று வந்தது.

இந்த இரண்டு மேல்நிலை வல்லரசுகளின் ஆதிக்கத்தை முறியடித்து அணிசேராக் கொள்கையை நிலைநாட்டவே இலங்கை இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.நாவில் முன்மொழிந்தது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின் போது இலங்கையின் பிரதமராக இருந்த சிறீமாவோ நேரடியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட, ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இந்தக் காலத்தில்தான், அதாவது 1974 ஒகஸ்ட் 01ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன்முதலாக பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் பாரம்பரிய தமிழ்க் கட்சிகள் எவ்வித பங்களிப்பும் வழங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழர்களின் வாழ்வில் பெரும் நிகழ்வாக அமைந்த இந்தப் பல்கலைக்கழக திறப்பு விழாவுக்கு வருகை தந்த பிரதமர் சிறீமாவோக்கு எதிராக தமிழரசுக் கட்சி வட மாகாணத்தில் இரு நாட்கள் துக்க தினம் அனுட்டித்து ஹர்த்தால் நடத்தியது.

அதற்கு காரணம், 'தமிழ் மக்களுக்கு தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும்' என்றும், 'இல்லை, இல்லை தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும்' என்றும் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் அரசியல் நோக்கத்துடன் கயிறு இழுவையில் ஈடுபட்டதால், அவர்களால் தமிழ் பகுதியில் ஒரு பல்கலைக்கழகத்தைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. உண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தவர்கள் இடதுசாரிகளும், ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த முற்போக்கு சக்திகளுமேயாவர்.

அதேநேரத்தில் இந்தக் காலகட்டத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாடு மாநாடொன்றை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தியது. இந்த மாநாட்டில் இலங்கை முழுவதுமிருந்து எழுத்தாளர்களும் கலைஞர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, எழுத்தாளர் சங்கம் தேசிய இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாகவும், நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவது சம்பந்தமாகவும் தயாரித்த 12 அம்சங்கள் அடங்கிய மகஜரைப் பெற்றுக்கொண்டு அதற்குச் சாதகமாக உரையாற்றினார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொதுவாக நாட்டின் நலன் கருதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், சில பாதகமான செயல்பாடுகள் அரசாங்கத்தின் முன்னேற்றத்துக்கு இடையூறாக அமைந்தன. அதில் முக்கியமானது 1973இல் ஏற்பட்ட உலகளாவிய எண்ணெய் நெருக்கடியாகும். இந்த நெருக்கடியால் இலங்கையில் பொருளதார நெருக்கடியும் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டன. அந்த இக்கட்டான நேரத்தில் அரசியல் விரோதம் காரணமாக மேற்கு நாடுகள் இலங்கைக்கு உதவ மறுத்தன. சீனா மட்டும் தன்னாலான உதவியைச் செய்தது.

இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளையும் சிக்கன நடவடிக்கைகளையும் அமுல்படுத்தியது. அதனால் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவியதுடன் விலையும் பல மடங்கு அதிகரித்தது. பாண் வாங்குவதற்காக மக்கள் அதிகாலையிலேயே பேக்கரி வாசல்களில் காத்துக் கிடந்தனர். தேநீர்க் கடைகளில் மக்கள் சீனி போடாத 'காட்ட' என்ற வெறும் தேநீரை அருந்தும் நிலை உருவானது. அதனால் சாதாரண மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந்தனர். இந்த நிலையை எதிர்க்கட்சியான ஐ.தே.க. தனக்குச் சாதகமாக நன்கு பயன்படுத்திக் கொண்டது.

இன்னொரு பக்கத்தில் தமிழ் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் ஓரணியாகத் திரண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி 1976இல் வட்டுக்கோட்டையில் ஒரு மாநாட்டைக் கூட்டி தமிழீழ அரசு அமைக்கப் போவதாகப் பிரகடனம் செய்தனர். 1977 தேர்தலை மனதில் வைத்து போலியாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும், அது தமிழ் மக்களைத் தேசிய வாழ்விலிருந்து மேலும் தனிமைப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி என்பன வளர்ந்து வந்த நிலையில் அரசாங்கத்திற்குள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, அனுர பண்டாரநாயக்க போன்ற வலதுசாரிகளின் கை ஓங்கியது. அவர்கள் இடதுசாரிக் கட்சிகளின் அமைச்சர்களின் செயல்பாடுகளில் தலையீடுகளை மேற்கொண்டனர். இதனால் ஒருபுறத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மறுபுறத்தில் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றுக்கும் இடையில் முரண்பாடுகள் வளர்ந்து இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் அரசை விட்டு வெளியேறின. இது ஐ.தே.கவுக்கும் தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

அதனால் சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் 1977 பொதுத் தேர்தலில் தனித்தனி அணிகளாகப் போட்டியிட்டன. அதன் காரணமாக, 1956 தேர்தலில் ஐ.தே.க. எட்டு ஆசனங்கள் மட்டும் எடுத்தது போல, 1977 தேர்தலில் சுதந்திரக் கட்சியும் எட்டே எட்டு ஆசனங்களை மட்டும் வென்றது. இடதுசாரிக் கட்சிகள் வரலாற்றில் முதல் தடவையாக ஆசனங்கள் எதுவும் கிடைக்காமல் நாடாளுமன்றத்துக்கு வெளியே விடப்பட்டன. மறுபக்கத்தில் ஐ.தே.க. ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று அடுத்து வந்த 17 வருடங்களுக்கு தனது தனது எதேச்சாதிகார ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டது.

**நன்றி:** chakkaram.com

## கொரோனா பிடியில் இதுவரை சிக்காத இலட்சத்தீவுகள்

**இ**ந்தியாவில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் பரவியுள்ள கொரோனா வைரசால், இலட்சத்தீவுகள் யூனியன் பிரதேசத்தில் மட்டும் இதுவரை ஒருவர் கூட பாதிக்கப்படவில்லை.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரசால் பல இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வைரஸ் தொற்றினால் உயிரிழப்பு மட்டும் 3.58 இலட்சத்தை கடந்துள்ளது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கொரோனா வைரஸ் பரவியது. இந்தியாவில் இதுவரை 1,59,054 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது, 4,541 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வளவு நாட்களாக கொரோனா பாதிப்பு இல்லாத மாநிலங்களாக திகழ்ந்த நாகாலாந்து மற்றும் சிக்கிம் மாநிலங்களிலும் சமீபத்தில் பரவியுள்ளது.

இலட்சத்தீவுகள் (Lakshadweep) இந்தியாவிலுள்ள யூனியன் பிரதேசங்களில் ஒன்று. இதன் தலைநகரம் கவரத்தி (Kavaratti) ஆகும். இவைகள் மொத்தம் 30 சதுர கி மீ பரப்பளவு கொண்ட 36 தீவுகளாக இருக்கின்றன. கேரளக் கரைக்கு மேற்குப் புறமாக 200 முதல் 300 கிமீ தூரத்தில், அரபிக் கடலில் இவைகள் நிலை கொண்டுள்ளன. 10 தீவுகளில் வாழும் மொத்த மக்கள் தொகை 64,473 ஆகும். பழைமையான இலட்சத்தீவுகளைப் பற்றிய குறிப்பு தமிழ் நூலான புறநானூற்றிலும் காணக் கிடைக்கின்றது.

# ஹிட்லரின் பாசிசத்தை முறியடித்த 75 ஆம் ஆண்டு

**மே** 9 ஆம் நாள் ஹிட்லர் தலைமையிலான பாசிசத்தை எதிர்த்த போரில் உலக ஜனநாயக சக்திகள் வெற்றிக் கொடியை நிலைநாட்டிய நாள். இந்த நாளில்தான் பெர்லின் அரண்மனையின் உச்சியில் செஞ்சேனை வீரர்களால் செங்கொடி ஏற்றப்பட்டது. இன்று அந்த வெற்றியின் 75 ஆவது ஆண்டு கொண்டாடப்படுகிறது. கோவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக பொது வெளியில் பிரம்மாண்ட விழாக்கள் திட்டமிடப்படவில்லை. எனினும் இதன் முக்கியத்துவம் சற்றும் குறைந்தது அல்ல! ஜெர்மனியின் ஹிட்லர்/ இத்தாலியின் முசோலினி/ ஜப்பானின் டோஜோ ஆகியோரின் பாசிசக் கூட்டணியை எதிர்த்து ஒரு பாசிச எதிர்ப்பு ஜனநாயகக் கூட்டணி அமைத்து மக்களை காப்பாற்ற வேண்டும் என சோவியத் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது.

**கண்ணை மறைத்த கம்யூனிச எதிர்ப்பு**

அந்த வேண்டுகோளை பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் செவி மடுக்கவில்லை. ஏகாதிபத்தியவாதிகளின் கணக்கோ வேறு மாதிரியாக இருந்தது. அவர்களுக்கு சோசலிசப் புரட்சிதான் பாசிசத்தைவிட அதிக பயத்தை அளித்தது. எனவே பாசிசம் உருவாவதும் அது சோசலிசத்தை அழிக்க முன்வருவதும் தமக்கு சாதகம்தான் என எண்ணினர். இதனை அமெரிக்க ஜனாதிபதி ஹென்றி ட்ரூமனின் கீழ்க்கண்ட கூற்று மிகத் தெளிவாக வெளிப்படுத்தியது:

“ஜெர்மனி வெல்வது போல சூழல் உருவானால் நாம் ரஷ்யாவுக்கு உதவ வேண்டும். ரஷ்யா வெல்வது போல சூழல் உருவானால் நாம் ஜெர்மனிக்கு உதவ வேண்டும். அந்த வகையில் அவர்களுக்குள் போரிட்டுகொண்டு அதிகபட்சம் ஒருவருக்கொருவர் கொன்று குவித்துக்கொள்ளட்டும்.” கம்யூனிச எதிர்ப்பு அவர்களின் கண்களை மறைத்தது என்பதற்கு ட்ரூமனின் இக்கூற்று சிறந்த எடுத்துக்காட்டு. எனினும் ஒற்றுமைக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து கடினமாக உழைத்தது. அதே சமயத்தில் போருக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டது. 1941ல் ஹிட்லர் சோவியத் யூனியனை தாக்கியபொழுது அது தன்னந்தனியாகப் போரிட்டது.


VICTORY!
THE LOCK HAVEN EXPRESS
Not Only A Newspaper—A Community Asset
GERMANY SURRENDERS!
War In Europe Ended At 8.41 P. M. Sunday
Gen. Jodl, German Chief Of Staff, Signs Capitulation
City Hears News With Expression Of Satisfaction
Our Victory-In-Europe Edition
V-E Day Tomorrow
Nazis Announced Surrender First In Broadcast Report

**கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை**

1941 ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று சோவியத் மக்களுக்கு ஆற்றிய உரையில் ஸ்டாலின் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: “ஜெர்மனியுடன் நடக்கும் இந்த யுத்தம் சாதாரண யுத்தம் அல்ல. இது இரண்டு இராணுவங்களுக்கு இடையே நடக்கும் யுத்தம் அல்ல. மாறாக இந்த யுத்தம் என்பது பாசிச ஜெர்மனி இராணுவத்திற்கு எதிராக அனைத்து சோவியத் மக்களின் வரலாறு காணாத யுத்தம் ஆகும்.” அவர் மேலும் கூறினார்:

“செஞ்சேனையும் சோவியத் மக்களும் நமது கிராமங்களையும் நகரங்களையும் பாதுகாக்க கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை போராட வேண்டும்” என்றார். மேலும் இந்தப் போரில் உலகில் உள்ள அனைத்து ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களின் ஆதரவும் நமக்கு உள்ளது என ஸ்டாலின் கூறினார். சோவியத் மக்கள் காட்டிய வீரமும் தீரமும்தான் ஹிட்லருக்கு முதல் தோல்வியை அளித்தது. அதற்குப் பின்னர்தான் ஏனைய முதலாளித்துவ நாடுகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இப்போரில் சோவியத் யூனியனின் தியாகம் அளப்பரியது. குறிப்பாக சோவியத் மக்களின் உயிர்த் தியாகம் ஈடு இணையற்றது. இதனை மறுபக்கத்தில் உள்ள விபரங்கள் தெளிவாக்கும்.

சோவியத் யூனியன் பல இயற்கை வளங்களையும் இழந்தது. ஆயிரக்கணக்கான நகரங்கள், பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் அழிந்தன. 61,600 கி.மீ. நீளமுள்ள இருப்புப் பாதையும் 90% நிலக்கரிச் சுரங்கங்களும் அழிக்கப்பட்டன. 30,000க்கும் அதிகமான ஆலைகளும் தரைமட்டமாயின. 84000 பள்ளிகளும் 43000 நூலகங்களும் அழிந்தன. 3 கோடி கால்நடைகள் மடிந்தன.

அ.அன்வர் உசேன்

இரண்டாம் உலகப்போரில் மொத்தம் 2.36 கோடி இராணுவ வீரர்களும் 4.20 கோடி மக்களும் ஆக மொத்தம் 6.56 கோடி பேர் உயிரிழந்தனர். மொத்த உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு சோவியத் யூனியனுடையது. இந்த மகத்தான தியாகம்தான் பாசிசத்திடமிருந்து உலகைக் காப்பாற்றியது. அப்பொழுது சோசலிச நாடாக இல்லை என்றாலும் சீனாவும் 1.5 கோடி உயிர்களை இழந்தது. பாசிச எதிர்ப்புப் போரில் சீன கம்யூனிஸ்டு கட்சி முன்னணியில் இருந்தது. இந்த உன்னதமான தியாகத்தைதான் ஏகாதிபத்தியம் தற்பொழுது இருட்டடிப்புச் செய்ய முயல்கிறது.

**21 ஆம் நூற்றாண்டு பாசிசத்தின் வடிவம்**

இந்த 75 ஆண்டுகளில் ஏராளமான மாற்றங்கள் நடந்துள்ளன. பாசிசத்தால் வீழ்த்த முடியாத சோசலிசத்தை முதலாளித்துவம் வேறு வழிகளில் பின்னடைவைச் சந்திக்கச் செய்துள்ளது. சோசலிச சமூகத்துக்குள் இருந்த சில பலவீனங்களும் இதற்குக் காரணமாக அமைந்தன. நவீன அறிவியல் தொழில்நுட்ப சூட்சுமங்களை தன்

கைகளில் வைத்திருக்கும் முதலாளித்துவம், பொருளாதாரம் மற்றும் இராணுவ வலிமை மூலம் தனது மேலாதிக்கத்தை நீடிக்க முயல்கிறது.

எனினும் சோசலிசத்தின் பின்னடைவு முதலாளித்துவத்திற்கு நிரந்தரமாக உதவவில்லை. மக்களின் உணவு/கல்வி/மருத்துவம் தொடர்பான குறைந்தபட்சத் தேவைகளைக் கூட முதலாளித்துவத்தால் நிறைவேற்ற இயலவில்லை. அதீத பொருளாதார அசமத்துவம் முதலாளித்துவத்துக்கு எதிரான அதிருப்தியை மக்களிடையே மேலும் மேலும் உருவாக்கிக் கொண்டுள்ளது. நவீன தாராளமயக் கொள்கைகளால் உருவான பல தீமைகள் உழைப்பாளிகளின் வாழ்வாதாரத்தை கடுமையாகச் சீரழித்துள்ளது.

இவற்றை முதலாளித்துவத்தால் தீர்க்க இயலவில்லை. அதே சமயத்தில் இடதுசாரிகளும் வலுவாக இல்லாத சூழலில் முதலாளித்துவம் தனது இலாபக் கொள்ளையை காத்துக்கொள்ள அதீத வலதுசாரி அரசியலை உருவாக்கி அதற்கு ஆதரவு தருகிறது. ஆளும் அரசியல்வாதிகளின் செயல்களுக்கு சவால் விடுவதால் உழைப்பாளி மக்களின் கணிசமான ஆதரவை இந்த வலதுசாரி சக்திகள் பெற்றுள்ளன. அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப், பிரிட்டனின் போரிஸ் ஜான்சன், ஹங்கேரியின் விக்டர் ஓர்பான், பிரேசிலின் பொல்சானரோ, துருக்கியின் எர்டோகன், ஆஸ்திரேலியாவின் டாம் மோரிசன் போன்ற பல தலைவர்கள் இந்த பட்டியலில் அடங்குவர். இந்த பட்டியலில் இருக்கும் இன்னொரு மிக முக்கிய பெயர் நரேந்திர மோடி.

இவர்களின் பல செயல்பாடுகள் அன்றைய பாசிசத்தை நினைவுபடுத்துவதாக சமூக ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்கின்றனர். எனினும் அன்றைய ஐரோப்பிய பாசிசம் அப்படியே மீண்டும் தலைஎடுக்க வாய்ப்பு இல்லை. 21 ஆம் நூற்றாண்டு பாசிசம் வேறு வடிவம் எடுக்கும். அதே போல் ஒவ்வொரு தேசத்திலும் அது மண்ணுக்கு ஏற்றவாறு மாறுபட்ட வடிவங்களைக் கொண்டிருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தனக்கு சீனா ஒரு பெரிய சவாலாக உருவாகும் என உலக முதலாளித்துவம் குறிப்பாக அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. சீனாவின் அதிவிரைவு முன்னேற்றம்

**உலகப்போரில் ஏற்பட்ட உயிரிழப்பு பற்றிய சில விபரங்கள்:**

| தேசம் | இராணுவ வீரர்கள் | குடி மக்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சோவியத் யூனியன் | 97,50,000 | 1,32,04,000 | 2,29,54,000 |
| சீனா | 35,00,000 | 1,15,00,000 | 1,50,00,000 |
| பிரிட்டிஷ் இந்தியா | 87,000 | 20,00,000 | 20,87,000 |
| பிரான்ஸ் | 2,17,600 | 2,67,000 | 4,84,600 |
| பிரித்தானியா | 3,82,700 | 67,100 | 4,49,800 |
| அமெரிக்கா | 4,16,800 | 1,700 | 4,18,500 |

அமெரிக்காவுக்கு கடும் சவாலை உருவாக்கியுள்ளது. சில விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்தாலும் சீனாவின் முயற்சிகள் அமெரிக்க முதலாளித்துவத்தின் தூக்கத்தைக் கெடுத்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

கோவிட் 19 வைரஸ் உலக அரசியலுக்கு புதிய பரிணாமத்தை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. சீனாவுக்கு எதிராக உலக தேசங்களை ஒன்றிணைக்க அமெரிக்கா முயல்கிறது. அதே சமயம் டொனால்டு டிரம்பின் "அமெரிக்க முதன்மை" எனும் அணுகுமுறை சீன எதிர்ப்பு அச்சாணியை பலவீனப்படுத்தும் வாய்ப்பும் உள்ளது. சீனாவின் பொருளாதார மீட்சியும் உலக முதலாளித்துவ சக்திகளை அது எப்படி கையாள்கிறது என்பதும் எதிர்கால அரசியலின் முக்கிய அம்சமாக இருக்கும்.

### இந்தியப் பாசிசம்

இந்தியாவை பொறுத்தவரை பாசிச ஆர்.எஸ்.எஸ். தனது நச்சுக் கொடுக்குகளை வலுவாகவே விரிவாக்கம் செய்துள்ளது. அதன் அரசியல் வடிவமான பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் பொழுது எல்லையில்லாத வாய்ப்புகளை ஆர்.எஸ்.எஸ். பெறுகிறது. நவீன தாராளமயக் கொள்கைகளும் பாசிசக் கொள்கைகளும் ஒருவித உடன்பாட்டை கொண்டுள்ளன. எனவேதான் பல பாசிச நடைமுறைகளை இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் எதிர்ப்பது இல்லை. தமது சுரண்டலுக்கு பாசிசம் அல்லது மதவாதம் பயன்படும் எனில் ஏன் அதை எதிர்க்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைபாடாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் மதச்சார்பின்மை மட்டுமல்ல மத ஒற்றுமை எனும் கேடயத்தையும் இந்திய முதலாளித்துவம் கீழே போட்டுவிட்டது எனில் மிகைஅல்ல. மத ஒற்றுமையை காக்கும் மகத்தான பொறுப்பை உழைக்கும் மக்களின் தோள்களில் வரலாறு சுமத்தியுள்ளது.

இந்தியப் பாசிசம் என்பது 1. வர்ணாசிரமம் மற்றும் சாதிய வேறுபாடுகளை களையாமலே இந்துக்களை ஒன்றுபடுத்துவது. 2. அதற்காக இஸ்லாமியர்களையும் கிறித்துவர்களையும் எதிரிகளாக கட்டமைப்பது 3. இந்துத்துவ தேசியத்தை இந்திய தேசியமாக கட்டமைப்பது 4. தமிழர் உட்பட பல தேசிய இனங்களின் வளமான கலாச்சாரம் மற்றும் அவர்களது மொழிகளை பலவீனப்படுத்தி அழிப்பது ஆகிய நான்கு முக்கிய வழிகளில் தன்னை மேலும் வலுப்படுத்திக் கொள்ள முயல்கிறது.

எனவே, பாசிச எதிர்ப்புப் போர் வெற்றியின் 75வது ஆண்டை கடைப்பிடிக்கும் இந்தத் தருணத்தில் உலக பாசிசப் போக்குகளையும் இந்தியாவில் நிகழும் வேகமான பாசிச நகர்வுகளையும் முறியடிக்க அனைத்து ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை தேசிய மற்றும் மாநில அளவில் உருவாக்குவது நமது முதன்மைக் கடமையாகும்.

---

அமெரிக்காவில் கொரோனாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு இலட்சத்தை எட்டியுள்ளது. இருப்பினும், இதைப் பொருட்படுத்தாமல், நாட்டின் அனைத்து 50 மாகாணங்களும் ஊரடங்கைத் தளர்த்தியுள்ளன. தடுப்பூசி தயாரிக்கப்படாவிட்டால் நாட்டில் 50 முதல் 60 இலட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்படக் கூடும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். அந்த நிலை ஏற்பட்டால், அமெரிக்காவில், இறப்புகளின் எண்ணிக்கை 2024 க்குள் 14 இலட்சத்தை எட்டும். அமெரிக்காவில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி நியூயார்க். அங்கு நாட்டின் மொத்த கேஸ்களில் 22 சதவீதம் பதிவாகியுள்ளன. சுமார் 30,000 பேர் இறந்துள்ளனர்.

அதேநேரம், மே 27ந் திகதிய நிலவரப்படி உலகம் முழுக்க கொரோனாவுக்கு 5,588,020 பேர் பாதிப்படைந்துள்ளனர். உலகம் முழுக்க கொரோனா பலி எண்ணிக்கை 347,872ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவிலிருந்து 2,365,703 பேர் மீண்டுள்ளனர்.

# சுமந்திரனின் காய் நகர்த்தல்கள் எதை நோக்கி?


தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் தமிழரசுக் கட்சியினதும் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அரசியல் அரங்கில் இரண்டு விதமான காய்களை நகர்த்தி வருகின்றார்.

ஒன்று, விடுதலைப் புலிகளுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தொடர்பு இல்லை என நிரூபிக்க எடுக்கும் முயற்சி. மற்றது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துடன் இணங்கிப் போவதற்கு, சில வேளைகளில் பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் இணைவதற்கு எடுக்கும் முயற்சி.

இதில் சுமந்திரனின் இரண்டாவது முயற்சி பற்றி கூட்டமைப்பின் முதன்மை கட்சியான தமிழரசுக் கட்சிக்கோ, மற்றைய இரு பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் என்பனவற்றுக்கோ பெரிதாக பிரச்சினைகள் எதுவும் இருக்கப் போவதில்லை. அதனால்தான் அவைகள் பிரதமர் மகிந்த ராஜபக்ச அழைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்துக்கு மறுப்பேதும் இன்றிச் சென்றனர். இந்தச் சந்திப்புக்கு கட்டாயமாகச் செல்ல வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி சம்மதிக்க வைத்தவர் சுமந்திரன் என்பதில் ஐயமில்லை.

அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. கடந்த 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் அரசாங்கத்துக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியதின் மூலம் பல விதமான சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்தவர்கள் இந்தக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். எனவே அவற்றை இழந்து நிற்க அவர்கள் தயாராக இல்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடுமையானதும் மிகவும் கீழ்த்தரமானதும் பொய்யானதுமான பிரச்சாரங்களை மேற்கொண்டது. 2015 ஜனாதிபதி தேர்தலின் போது தாம் ஆதரித்த மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றது போல இம்முறையும் ஐ.தே.க. வேட்பாளர் சஜித் பிரேமதாச வெற்றியடைவார் என்று எதிர்பார்த்தே கூட்டமைப்பு



கோத்தாவுக்கு எதிராக நின்றது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது.

அதுமட்டுமின்றி, எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் கோத்தபாய ராஜபக்சவின் அணிதான் வெற்றி பெறும் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட விடயம். எனவே தொடர்ந்தும் ராஜபக்சாக்களுக்கு எதிராக நின்றால் அடுத்த ஐந்து வருடங்களும் எதிர்க்கட்சியில் இருந்து 'காய' வேண்டி வரும். முன்னைய காலங்களில் தோல்வியடைபவர்கள் அடுத்த ஐந்து வருடங்கள் முடியும் வரை அப்படிக் காய்வதுண்டு. இப்போதைய அரசியல்வாதிகளுக்கு அத்தகைய கொள்கைப் பற்றோ பொறுமையோ இல்லை. மக்களுக்கு சேவை செய்வதை விட அரசியலை வைத்து பணம் உழைப்பதே நோக்கமாக மாறிவிட்டதால் அவர்கள் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தப் போக்கு ஏற்கெனவே தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளிலும் ஏற்பட்டுவிட்டது.

எனவே இனி வருங்காலங்களில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் அந்த அரசாங்கத்துடன் இணங்கிப் போவதின் மூலம் தாம் பிரதிநித்துவப்படுத்தும் மக்களுக்கு ஏதாவது செய்வதுடன், தமது சட்டைப் பைகளை நிறைக்கவும் முடியும் என்பது முதலாளித்துவ லிபரல் ஜனநாயகவாதிகளான சுமந்திரன் போன்றவர்களின் சிந்தனையாகும். இந்த அணுகுமுறை, அதாவது அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்துடன் இணங்கிச் செல்வதன் மூலம் தான் சார்ந்த மக்களுக்கு முடியமான நன்மைகளைச் செய்ய முடியும் என்ற அணுகுமுறை ஏற்கெனவே ஈ.பி.டி.பி. கட்சித் தலைவர் டக்ளஸ் தேவாநந்தாவினால் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் தலைமைகளும், மலையகத் தலைமைகளும் நீண்ட காலத்துக்கு முன்பே இந்த அணுகுமுறையால் நன்மை அடைந்துள்ளனர்.

முன்னைய ஆட்சியின் போது நான்கரை ஆண்டுகளாக அரசாங்கத்தில் தாம் சேரவில்லை என்று சொல்லிக்கொண்டு, அதேநேரத்தில் ரணில் ஆட்சிக்கு முண்டுக் கொடுத்ததின் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஒரு சாதாரண பிரச்சினைக்குக் கூட தீர்வு காணவில்லை. அதன் காரணமாக

தமிழ் மக்கள் கூட்டமைப்பு மீது நம்பிக்கை இழந்துவிட்டதை 2019 பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது அவர்களது வாக்குவங்கி சரிவடைந்ததிலிருந்து அறிய முடிந்தது. இப்படி இருப்பதைவிட டக்ளஸ் தேவானந்தா போல வெளிப்படையாக அரசாங்கத்தில் சேர்ந்திருந்தாலாவது மக்களுக்கு ஏதாவது செய்திருக்கலாம் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் உருவாகியிருந்தது.

எனவே, தொடர்ந்தும் அப்படி இருந்தால் அல்லது ராஜபக்சாக்களுக்கு எதிரான வழமையான எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்தால் அது இப்போது மக்கள் மத்தியில் எஞ்சி இருக்கும் ஆதரவையும் இழப்பதில் முடிந்துவிடும் என்பது சுமந்திரன் போன்ற 'நாலு' விடயங்களையும் நன்கு அவதானிக்கும் அரசியல்வாதிகளுக்குத் தெரியும். நிலைமை அப்படித் தொடர்ந்தால் டக்ளஸ் தேவானந்தாவின் கை ஓங்கிவிடும் என்பதும் தெரியும். எனவே அந்த நிலைமை ஏற்படாமல் தடுப்பதானால் அரசுடன் நலவுறவைப் பேணுவதைத் தவிர வேறு வழியில்லை.

அத்துடன் சுமந்திரன் போன்றவர்களின் தற்போதைய புதிய போக்கிற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. அதாவது இனி வரப்போகும் குறைந்தது 20 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு வடிவத்திலும் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்பதே அது. அதற்கான காரணங்களில் ஒன்று ஐ.தே.க. மக்களின் செல்வாக்கை முற்றுமுழுதாக இழந்திருப்பது. மற்றது ஐ.தே.கவில் தீர்க்க முடியாத அளவுக்கு உருவாகியிருக்கும் தலைமைத்துவப் பிளவுகள். உதாரணமாக, இன்றைய கொரோன நோய் ஏற்பட்ட நிலையில் ஐ.தே.க. பதவியில் இருந்திருந்தால் குறைந்தது 5,000 பேராவது இலங்கையில் இறந்திருப்பார்கள் என்று மக்கள் சொல்லுமளவுக்கு ஐ.தே.கவின் இயலாமை குறித்து மக்கள் மத்தியில் உள்ள மதிப்பீடு.

இது ஒருபுறமிருக்க, சுமந்திரன் புலிகள் சம்பந்தமாகவும் ஆயுதப் போராட்டம் சம்பந்தமாகவும் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய ஒரு பேட்டி தமிழ் தேசியவாதிகள் மத்தியில் புயலைக் கிளப்பி இருக்கிறது. வழமை போல சுமந்திரன் "துரோகி" என வசை பாடப்படுகிறார்.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்னவெனில், சுமந்திரன் மீது வசை பாடுபவர்கள் உண்மையான தமிழ் தேசியவாதிகளோ, புலி ஆதரவாளர்களோ, ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவர்களோ இல்லை என்பதுதான். சுமந்திரன் மீது கண்டனம் தெரிவிப்பவர்கள் போலியாக தம்மை புலி ஆதரவாளர்களாகக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றி வாக்கு வேட்டையாடலாம் என எண்ணுகின்றனர். பொது மக்களைப் பொறுத்தவரை ஒரு சிறு தொகையினர் புலிகள் மீது பற்றுதல் வைத்திருந்தாலும், பெரும்பாலான மக்கள் முன்னரே புலி ஆதரவாளர்களாகவோ, தமிழீழம் வருமென்று நம்பியிருந்தவர்களோ அல்ல. புலிகளின் பயமுறுத்தல் காரணமாக அவர்களை ஆதரிப்பவர்கள் போல பாசாங்கு செய்தவர்கள். முன்னாள் புலிப் போராளிகளுக்கு இன்று தமிழ் சமூகம் கொடுக்கும் மதிப்பிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம்.

சுமந்திரன் புலிகள் பற்றியும் ஆயுதப் போராட்டம் குறித்தும் பொது வெளியில் இப்படித் துணிகரமாக கருத்துச் சொன்னதற்குக் காரணம் இருக்கின்றது. அதாவது, இனிமேல் தமிழீழம் கோரி ஆயுதப் போராட்டம் ஒன்றை தமிழ் தேசியவாதிகள் மேற்கொள்வதறகு எவ்வித வாய்ப்பும் அறவே இல்லை. எனவே இடதுசாரிகள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருவது போல ஐக்கிய இலங்கைக்குள் தான் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு. அது பேச்சுவார்த்தை மூலமே எட்டப்பட முடியும்.

அந்தத் தீர்வை எட்டுவதற்கான முன் நிபந்தனைகளாக சிங்கள அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் புரிந்துணர்வு தேவை. அதற்கு முதலாவதாக தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்போ, புலிகளுக்கு ஆதரவானவர்களோ, தமிழீழத்துக்கு ஆதரவானவர்களோ அல்லது ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவானவர்களோ இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும். அதைத்தான் சுமந்திரன் தனது பேட்டியின் மூலம் செய்ய முயன்றிருக்கிறார்.

அடிப்படையில் சுமந்திரன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் ஆதரவானவர். அதுதான் அவரது அடிப்படை நிலைப்பாடு. ஆனால் இலங்கையின் யதார்த்த சூழ்நிலையில் சில நடைமுறை சார்ந்த முடிவுகளை எடுக்காதுவிடின் முன்னோக்கி நகர முடியாது என நினைக்கிறார். இது சுமந்திரனின் புதிய கண்டுபிடிப்பு அல்ல. கடந்த காலங்களில் ஏற்கெனவே அல்பிரட் துரையப்பா, குமாரசூரியர், தியாகராசா, அருளம்பலம், இராசதுரை, லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோரும், தற்பொழுது டக்ளஸ் தேவானந்தாவும் பின்பற்றிய, பின்பற்றும் நிலைப்பாடுதான் அது. அவர்களையெல்லாம் சுமந்திரன் சாரந்திருக்கும் கட்சி கடந்த காலங்களில் துரோகி என வர்ணித்தது. அவர்களில் சிலர் கொலையும் செய்யப்பட்டனர். அவர்களின் பாதையில் செல்ல முயற்சிப்பதால் இப்பொழுது சுமந்திரன் சொந்த சகாக்களாலேயே துரோகியாக்கப்பட்டுள்ளார்.

ஆனால் இம்முறை அடிப்படையில் மிதவாத போக்குள்ள தமிழ் சமூகம் சுமந்திரனின் கருத்துக்குப் பின்னால் நின்று அவருக்கு ஆதரவு வழங்கக்கூடும். அப்படி நிகழ்ந்தால் தமிழர்களின் வரலாற்றில் அது ஒரு சாதனையாகப் பொறிக்கப்படும்.

*-சுப்பராயன்*

## கொரோனா அபாயம் ஓயவில்லை!

**கொ**ரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த உலகம் முழுவதும் சமூக முடக்கம், ஊரடங்குகள் நீட்டிக்கப்பட்டு ஏராளமானோர் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வரும் நிலையில், கொரோனா தாக்கத்தின் முதல் அலையே இன்னும் ஓயவில்லை என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

தற்போது நாம் இரண்டாவது அலையில் இல்லை. உலகம் முழுவதும் கொரோனாவின் முதல் அலையின் நடுமத்தியப் பகுதியில்தான் இருக்கிறோம் என்று உலக சுகாதார அமைப்பின் செயல் இயக்குநர் டாக்டர் மைக் ரியான் (Mike Ryan) தெரிவித்துள்ளார்.

தென் அமெரிக்கா, ஐரோப்பா, தெற்காசிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல்வேறு உலக நாடுகளில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்து வருவதை சுட்டிக் காட்டியிருக்கும் அவர், உலகம் முழுவதுமே, கொரோனா தொற்று வேகமாகப் பரவும் ஒரு அபாயக் கட்டத்திலேயே இப்போதும் நாம் இருக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# சாதி எதிர்ப்புப்போராளி பண்டிதர் அயோத்திதாசர் 175வது பிறந்த தினம்


அயோத்தி தாசர் (C. Iyothee Thass, மே 20, 1845 – மே 5, 1914)
தென்னிந்தியாவின் முதல் சாதி எதிர்ப்புப் போராளி, சமூக சேவகர், தமிழறிஞர் மற்றும் சித்த மருத்துவர் ஆவார். திராவிட இயக்கம் உருவாக வித்திட்ட முன்னோடிகளில் ஒருவர். ஆதி திராவிட பின்புலத்தில் இருந்து வந்த இவர், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்துக்காக அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய களங்களில் தீவிரமாகச் செயல்பட்டார். பௌத்தத்திற்கு மாறிய இவர் பறையர்களின் மூலச் சமயம் பௌத்தம் என்றும் அதனால் அவர்கள் பௌத்தத்திற்கு மாறவேண்டுமென அறிவுறுத்தினார். 1891 இல் இரட்டைமலை சீனிவாசனுடன் இணைந்து பஞ்சமர் மகாசன சபையைத் தோற்றுவித்தார். பஞ்சமர் என்போர் வருணாசிரம முறையில் வராமல், அவர்ணாக்கள் என அழைக்கப்பட்டனர்.

பெரும் கல்விப்புலம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய தாத்தா பட்லர் கந்தப்பன் பிரதிகள் அழிந்து நூற்றாண்டுகளாக வழக்கில் இல்லாமல் போயிருந்த திருக்குறளைத் தன் குடும்ப சேமிப்பு ஏடுகளில் இருந்து மீட்டு எல்லிஸ் துரையிடம் வழங்கியவர். அதன் பின்னர்தான் திருக்குறள் இன்றைய அச்சு வடிவுக்கு வந்தது.

**கல்வியும், புலமையும்**

அயோத்திதாசர் 1845 மே 20 இல் சென்னை, தேனாம்பேட்டை ஆயிரம் விளக்குப் பகுதியில் பிறந்து, பிறகு தனது தந்தையின் பணியின் காரணமாக நீலகிரிக்கு புலம்பெயர்ந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காத்தவராயன் ஆகும். நீலகிரியில் இவரது தாத்தா ஜோர்ஜ் ஹரிங்டனிடம் (George Harrington) வேலை பார்த்து வந்தது இளம்வயதில் அயோத்திதாசருக்கு பலவகைகளில் உதவியாய் இருந்தது.

தனது தந்தையிடமும் காசி மேடு சதாவதாணி வைரக்கண் வேலாயுதம் புலவர் (1830–1892), வல்லக்காளத்தி வீ. அயோத்தி தாசர் பண்டிதர் (1836–1900) ஆகியோரிடமும் கல்வி கற்றார். தமிழ், சித்த மருத்துவம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையும் ஆங்கிலம், வடமொழி, மற்றும் பாலி போன்ற மொழியறிவும் பெற்று



விளங்கினார். தன் குருவின் மீது கொண்ட மதிப்பால் காத்தவராயன் என்ற தனது பெயரை அயோத்தி தாசர் என மாற்றிக் கொண்டார்.

**சமயம் தொடர்பான கருத்துகளும் பணிகளும்**

தன்னுடைய 25 ஆம் வயதில் நீலகிரியில் ஒடுக்கப்பட்ட மக்களான தோடர்களை அணிதிரட்டி 1870 களில் 'அத்வைதானந்த சபை' ஒன்றை நிறுவினார். அவரது குடும்பம் வைணவ சமய மரபுகளைப் பின்பற்றியது. அதனடிப்படையில் தன் ஆண் குழந்தைகளுக்கு மாதவராம், பட்டாபிராமன், ஜானகிராமன், இராசராம் என்றும். புத்த மதத்தைத் தழுவிய பின்னர் பிறந்த தனது பெண் குழந்தைகளுக்கு அம்பிகா தேவி, மாயா தேவி எனப் பெயர் சூட்டினார்.

அத்வைத வேதாந்தத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அதனுடைய இறைக்கொள்கை, சடங்குவாதம், பிராமணீய ஆதிக்கம், ஆன்மீகக்கொள்கை, மத பண்பாட்டுத்தளங்கள் என அனைத்து வடிவங்களுக்கும் எதிரான ஒரு பகுத்தறிவு ரீதியான விடுதலை மெய்யியலே அவரது தேடலாக இருந்தது. அதன் அடிப்படையில் சுய சிந்தனை, சுய கருத்தியல் தேடலாகவும் அது அமைந்தது.

பண்டிதருடைய காலம் (19 நூற்றாண்டின் பிற்பகுதி) இந்துத்துவம் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட காலமாக இருந்தது. பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகள் மூலம் அனைத்தும் இந்து சமயத்துக்குள் திணிக்கப்பட்டது. 'யாரெல்லாம் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் இல்லையோ' அவர்களெல்லாம் இந்துக்கள் என 1861 முதல் 1891 வரை மக்கள் தொகை கணக்கெடுப்பில் 'இந்து' அடையாளத்திற்குள் வலிய திணிக்கப்பட்டார்கள்.

பண்டிதர் வைணவ மரபை ஆதரித்தாலும் 'இந்து' என்ற அடையாளத்தை ஏற்க மறுத்தவர். அவ்வாறு 'இந்து' அடையாளத்தை ஏற்றுக்கொண்டால் 'இந்து' சமூகத்தின் சாதீய அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதியக்கொடுமையை மிக அதிகமாக அனுபவிக்கும் ஆதிதிராவிட மக்கள் இந்து அடையாளத்தை ஏற்கக்கூடாது என்பதில் மிக எச்சரிக்கையாக இருந்தார். அதற்கு மாற்றாக இந்து அல்லாத மாற்று அடையாளம் ஒன்றைத் தேடத் துவங்கினார். தமிழகத்தில் பக்தி வடிவங்களில் 'தமிழ்ச் சைவ' மீட்டுருவாக்க முயற்சி நடந்தது. இதுவும் ஒரு வகையில் சாதியத்தை உள்வாங்கியவர்களின் முயற்சியாகவே இருந்தது. 'தமிழ் சைவம்' பிராமண எதிர்ப்புப் பேசினாலும் 'சாதி ஒழிப்பு' பற்றி எதுவும் பேசவில்லை. அதனால் பண்டிதர் தமிழ் சைவத்தோடு இணையவில்லை.

பண்டிதரால் துவக்கப்பட்ட 'சாதியற்ற திராவிட மஹாஜன சபையின்' சார்பாக 1891 திசம்பர் 1 திகதி நிறைவேற்றப்பட்ட இலவசக் கல்வி, கோவில் நுழைவு, தரிசு நிலம் ஒதுக்குதல் போன்ற 10 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை இந்திய தேசிய காங்கிரசு கட்சிக்கு அனுப்பினார். அந்த கோரிக்கைகள் இறுதிவரை நிறைவேற்றப்படவே இல்லை. சென்னை மகாஜன சபை 1892 இல் ஏற்பாடு செய்த கூட்டத்தில், நீலகிரி மாவட்டப் பிரதிநிதியாய்ப் பண்டிதர் கலந்து கொண்டு, மேற்படி 10 கோரிக்கையை சமர்ப்பித்து, விஷ்ணு, சிவன் கோவில்களில் நுழைய அனுமதி கேட்டார். அது உடனே மறுக்கப்பட்டு அவமதிக்கப்பட்டார். இந்த அவமானபடுத்துதல் பண்டிதரை இன்னொரு சிந்தனைக்கு இட்டுச் சென்றது. நாம் யார்? இந்துக்களா? சாதி இழிவுகள் ஏன் நம்மீது திணிக்கப்படுகிறது? என எண்ணி சுயத்தைத்தேடி நகர்ந்தார். வேதம், இந்து, பிராமணீயம், சடங்குவாதம் முதலானவற்றை கேள்விக்கு

உட்படுத்தினார்.

**ஆதி திராவிடர்களுக்கான செயற்பாடுகள்**

*1870* களில் அயோத்தி தாசர் நீலமலையின் தோடர் மற்றும் பிற மலைவாழ் பழங்குடியினரையும் ஒருங்கிணைத்தார். *1875*இல் அத்வைதானந்த சபையை நிறுவினார். வெசிலியன் மிஷன் பள்ளியை ஆயிரம் விளக்கு பகுதியில் ஆதி திராவிடர்களுக்காக நடத்திய அருட்திரு டி ஜோன்ரத்தினத்துடன் (Rev. John Rathinam) தொடர்பு ஏற்பட்டது. ஜோன்ரத்தினம் நடத்திய 'திராவிடர் கழகம்' அதன் சார்பாக வெளிவந்த 'திராவிட பாண்டியன்' என்ற செய்தி இதழிலும் பண்டிதர் பங்கெடுத்துக் கொண்டார்.

*1886* களில் ஆதி திராவிடர்கள் 'இந்துக்கள்' அல்ல என்று அறிக்கை விட்டார். அப்பிரகடனத்தைத் தொடர்ந்து *1891* இல் திராவிட மாகாசன சபையை நிறுவினார். *1891* இல் நடத்தப்பட்ட மக்கட்தொகைக் கணக்கெடுப்பில் ஆதி திராவிடர்கள் தங்களை இந்துக்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளாமல், 'சாதியற்ற தமிழர்கள்' எனப் பதிவு செய்யுமாறு வலியுறுத்தினார். இவரது நடவடிக்கைகள் இலங்கையின் பௌத்தப் புத்துயிர்ப்பிப்பாளர் அனகாரிக தர்மபாலருக்குப் பெரிதும் ஊக்கமளித்தன.

அப்போதிருந்த ஒரே கட்சி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி. அதை இரண்டு பிரிவாக பிரித்து ஒன்று வடநாட்டு காங்கிரஸ், அது வங்காளிகளின் காங்கிரஸ், மற்றொன்று தென்னாட்டு காங்கிரஸ் அது பிராமண காங்கிரஸ் என விமர்சித்து காங்கிரஸ் கட்சியை ஒதுக்கிவிட்டார். ஆக மதமாற்றம், அத்வைதம், தமிழ் சைவம், தியாசபிகல் தொடர்பு, காங்கிரஸ் கட்சி, அனைத்திலுமிருந்து வேறுபட்டும் பிற்போக்குத்தனத்திற்கு எதிராகவும் சுய கருத்தியலை, சுய அரசியலைத் துவக்கினார்.

ஆதி திராவிட மக்களை ஒடுக்குவதற்கு எழுப்பிய பண்பாட்டு, மதத்தடைகளை நீக்குவதுதான் ஒடுக்கப்பட்ட மக்களின் மெய்யான விடுதலையைக் கொண்டுவரும் என்றும் பௌத்தம் என்ற சாதி, வருண எதிர்ப்பு சமயமான பௌத்தமே அதற்கு ஏற்றது என்றும் கருதினார். பௌத்தமே ஆதி திராவிடர்களின் மூல சமயமாகவும் அவர்களின் தாழ்வு நிலைக்கு காரணமாகவும் அமைந்தது (அதாவது பௌத்ததை பின்பற்றியதால் ஆதி திராவிடர்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள்). அதே பௌத்த சமயம்தான் ஆதி திராவிடர் விடுதலைக்கும், அதிகாரம் பெறுவதற்கும் உறுதுணையாகவும் வழியாகவும் இருக்கும் எனக் கருதினார்.

இந்தியப் பாரம்பரியம் பௌத்த மதமாக இருந்தது என்பதைத் தன் தமிழ்ப் புலமை மூலம் விளக்கினார்:

இந்திய என்ற சொல் 'இந்திரம்' என்பதன் திரிபு. இந்திரனாகிய புத்தனும் அவனைக் குருவாக கருதும் மக்களும் வாழும் நாட்டிற்கு 'இந்திரதேசம்' என்ற பெயர் வந்தது. ஆரியர் வருகைக்கு முன் இங்கே ஒரு தேசம் இருந்தது, அந்த தேசியத்தைப் பௌத்தம் உருவாக்கியது. அதில் பகுத்தறிவு, மனித நேயம், சமத்துவம், அறக்கருத்தொற்றுமை, மெய்யியல் மற்றும் நடைமுறை சார்பானதாகவே இருந்து வந்திருக்கின்றது. இதில் அன்னியரான வெளியாரின் ஊடுருவலால், படையெடுப்பால் காலப்போக்கில் அது மந்திர அல்லது மாயத்தன்மையென திரிக்கப்பட்டது என்று பண்டிதர் விளக்குகிறார். சொந்த நாட்டின் சாதியற்ற பண்பாட்டை அயல் சக்திகள், வெளியாட்கள் நசித்து திரித்துவிட்டார்கள். பிறப்பால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை அழித்து சமத்துவத்தை நோக்கி நகரும் ஓர் அரசியல் கருத்தியலை உருவாக்கும் ஒரு தேசியத்தைக் கட்டமைக்க முயற்சித்தார்.

*1912* அக்டோபர் *30* தமிழன் இதழில், இந்தியாவிற்கு சுதந்திரம் அளித்தால் இம்மண்ணிண் மைந்தர்களாம் ஆதி தமிழர்களிடம் அரசியல் அதிகாரத்தை வழங்கவேண்டுமென ஆங்கிலேயர்களிடம் (சுதந்திரத்திற்கு *35* வருடங்களுக்கு முன்) கோரிக்கை வைத்தார். 'கருணை தாங்கிய பிரிட்டிஷ் துரையவர்கள், சுதேசிகள் மீது கிருபை பாவித்து சுயராட்சியத்தை அளிப்பதாயினும் இத்தேச பூர்வக்குடிகளுக்கு அளிப்பதே கருணையாகும். நேற்றுக் குடியேறி வந்தவர்களையும், முன்னாடி குடியேறி வந்தவர்களையும் சுதேசிகள் எனக் கருதி அவர்கள் வசம் சுயராட்சிய ஆளுகையைக் கொடுத்தால் நாடு பாழாகி சீர்கெட்டுப்போகும்' என்றார். ஆதி திராவிடர்கள் அரசியல் அதிகாரம் பெறவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இந்தியாவில் தமிழனுக்கு கிடைக்கவேண்டிய அதிகாரத்தை துணிந்து கேட்ட ஈடுஇணையற்ற மாமனிதர்.

**பௌத்தத்திற்கு மாறல்**

அயோத்தி தாசர் தனது வழிநடப்பவர்களுடன் கேணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்காட்டைச் (Colonel Henry Steel Olcott) சந்தித்து பௌத்தத்திற்கு மாறும் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். தமிழகப் பறையர்கள் பௌத்த மதத்தினரே என்றும் அவர்களுக்குச் சொந்தமான தமிழகத்தை ஆரியர்கள் கைப்பற்றிவிட்டதாகவும் அயோத்திதாசர் கருத்துத் தெரிவித்தார். ஒல்காட்டின் உதவியுடன் இலங்கைக்குச் சென்று அங்கிருந்த சிங்கள பௌத்தத் துறவி சுமங்கல நாயகரிடம் (Sumangala Nayake) தீட்சை பெற்றார். அங்கிருந்து திரும்பிய அயோத்திதாசர் சென்னையில் சாக்கிய பௌத்த சொசைட்டியைத் (Sakya Buddhist Society) தோற்றுவித்து, தென்னிந்தியா முழுவதும் அதன் கிளைகளை ஏற்படுத்தினார். 'இந்திய பௌத்த சங்கம்' (Indian Buddhist Association) எனவும் அறியப்பட்ட சாக்கிய பௌத்த சொசைட்டி *1898* ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

**தமிழன் இதழ்**

*ஒரு பைசாத் தமிழன்*
சென்னை இராயப்பேட்டையிலிருந்து *19* ஜூன், *1907* முதல் புதன் கிழமை தோறும் நான்கு பக்கங்களுடன் அன்றைய காலணா விலையில் 'ஒரு பைசாத் தமிழன்' என்று பெயர் சூட்டப்பட்டு வெளிவந்தது.

இந்த இதழ் வெளிவருவதற்கானத் தேவையையும் யாருக்கானது என்பதையும் பண்டிதர் அந்த இதழில் விளக்கியிருந்தார்:

"உயர் நிலையும், இடை நிலையும், கடை நிலையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, சரியான பாதை, நேர்மை ஆகியவற்றைக் கற்பிப்பதற்காக சில தத்துவவாதிகளும் இயற்கை விஞ்ஞானிகளும், கணிதவியலாளரும், இலக்கியவாதிகள் பலரும் ஒன்று கூடி இப்பத்திரிக்கையை 'ஒரு பைசாத் தமிழன்' வெளியிட்டிருக்கிறோம். தமிழ் மணம் பரவ விரும்பும் தமிழர் ஒவ்வொருவருக்கும் கையொப்பம் வைத்திதனை ஆதரிக்க கோருகிறோம்" என்று அறிவித்தார்.

இதழின் முகப்பில் 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழின் பெயரை புத்தக்

குறியீட்டு வடிவமான ஒன்பது தாமரை இதழ்களின் மீது எழுதி அதன் இடப்புறம் 'ஜெயது' என்றும் வலப்புறம் 'மங்களம்' என்றும் நடுவில் 'நன்மெய்க் கடைபிடி' என எழுதி, இருபுறமும் மலர் கொத்து என அழகுணர்வோடும் நேர்த்தியாகவும் இதழின் சின்னம் இருந்தது.

முதல் இதழில், கடவுள் வாழ்த்து, அரசர் வாழ்த்து, தமிழ் வாழ்த்து, பூய்வத்தமிழொளி (அரசியல் தொடர்) வர்த்தமானங்கள் (நாட்டு நடப்புச்செய்திகள்) சித்த மருத்துவ குறிப்புகள் என செய்திகளின் முக்கியத்துவம் கருதி வகைப்படுத்திப் பிரசுரிக்கப்பட்டது.

**பெயர்மாற்றம்**

ஓராண்டுக்குப் பிறகு, வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'அச்சுக்கூடமும் பத்திரிகைப்பெயரும் மாறுதலடைந்தது' (26. ஓகஸ்ட் 1908 – பக் 2) என்ற விளக்கத்துடன் 'ஒரு பைசாத்' நீக்கப் பெற்று 'தமிழன்' என்ற பெயரோடு 26. ஓகஸ்ட் 1908 முதல் வெளிவந்தது.

'தமிழனி'ல் வெளி வந்த செய்திகளும் விரிவாக்கம் செய்யப்பட்டிருந்தன. சிறப்பாக மகளிர் பத்தி (Ladies column) தலைப்பில் பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் பற்றிய செய்திகள் இடம் பெற்றது. அடுத்து பொதுச் செய்தி (Genaral news) பகுதியில் பொது வர்த்தமானம், நாட்டு நடப்புகள், பொதுச் செய்திகள், வானிலை அறிக்கை, வாசகர் கடிதங்கள் அயல் நாட்டுச் செய்திகள், விளம்பரங்கள் மற்றும் நூல் விமர்சனங்கள் தொடர்ந்து இடம் பெற்றிருக்கின்றன. தமிழர்கள் அதிகம் வசித்த கர்நாடக கோலார் தங்க வயல், குடகு, பர்மா, தென்னாப்பிரிக்கா, இரங்கூன், சிங்கப்பூர் போன்ற அயல் நாடுகளிலும் 'தமிழன்' இதழ் பரவியது.

மூட நம்பிக்கை, தீண்டாமை கொடுமைக்கு ஆதரவளிக்கும் வேத இதிகாசப் புரட்டுகள் பற்றி, பிராமணீய மேலாதிக்கம் பற்றி விரிவாக ஆய்வு செய்தார். 'யதார்த்த பிராமண வேதாந்த விவரம்', 'வேஷ பிராமண வேதாந்த விவரம்', 'ஸ்ரீ முருகக் கடவுள் வரலாறு', 'விபூதி ஆராய்ச்சி' போன்ற நூல்களில் வேத மத எதிர்ப்பு, பிராமணீய எதிர்ப்பு, மூடப்பழக்கம் எதிர்ப்பு, சாதி ஒழிப்பு போன்ற கருத்துக்களைக் குறித்து விரிவாக எழுதினார்.

தமிழகத்தில் எந்த இயக்கமும் தோன்றாத காலத்தில், சமூக நீதி, சமூக மதிப்பிடுகள் விளிம்பு நிலை ஒடுக்குமுறைகள் குறித்து பேசினார். அதிகாரத்தில் பங்கு, பிரதிநித்துவ அரசியல் ஒடுக்கப்பட்டோர் விடுதலை, பெண்ணியம், தமிழ் மொழியுணர்வு, பகுத்தறிவு, சுயமரியாதை, சாதி ஒழிப்பு, இந்தி மொழி எதிர்ப்பு, வேத மத, பிராமணீய எதிர்ப்பு, தீண்டாமை போன்ற கருத்துகளை உரையாடல் செய்து பல இயக்கங்களுக்கு ஒரு முழுமையான அரசியல்கொள்கை தொகுப்பை வழங்கிய தமிழன் இதழின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு கொண்டாடி பெருமைப்படுத்தியது. இதழியலிலும், அரசியலிலும் நவீனம் குறித்த கருத்தாக்கங்கள் தமிழன் இதழிலிருந்தே துவக்கம் பெற்றன.

**திராவிட அரசியலின் முன்னோடி**

திராவிட மகாஜன சபை இவரால் கி.பி. 1891 தொடங்கப்பட்டது. அயோத்தி தாசர் 1885 ஆண்டிலேயே திராவிட பாண்டியன் என்னும் இதழைத் தொடங்கினார். அவர் கி.பி. 1886 ஆம் ஆண்டில் இந்துக்களில் தீண்டத்தகாதவர்கள் என அழைக்கப்பட்டவர்கள் இந்துக்கள் அல்லாதவர்கள் என்றார். அவர்கள் யாவரும் சாதியற்ற திராவிடர்கள் என்னும் கருத்தையும் முன்வைத்தார். இதனால் இவர் திராவிட கருத்தியலின் முன்னோடி என அறியப்பட்டார். திராவிட மகாஜன சபையை நிறுவி திராவிட அரசியலைத் தொடங்கி வைத்ததால் திராவிட அரசியலின் முன்னோடி எனவும் கூறப்படுகிறார்.

**நன்றி: தமிழ் விக்கிப்பீடியா**

# அமெரிக்க அரசு மீது முன்னாள் தூதுவர் கடும் தாக்கு!

**அ**மெரிக்க அரசாங்கத்தின் சீன எதிர்ப்புப் பேச்சுகள் தமக்கு மெக்கார்த்தி (McCarthy) காலத்தை நினைவூட்டுவதாக சீனாவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் மக்ஸ் போகஸ் (Max Baucus) கூறியிருக்கிறார்.

முன்னாள் அமெரிக்கத் தூதுவர் சீன – அமெரிக்க இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதின் 40 ஆவது ஆணடு பூர்த்தியானதை முன்னிட்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்ற ஒரு வைபத்தில் பேசும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஆட்சியாளர்களின் எதிர்ப் பிரச்சாரம் சீனாவுக்கு எதிராக கடுமையாக இருக்கின்றது. இது மேல்மட்டம் வரையுள்ளது. ஜோ மெக்கார்த்தி இராஜாங்க இலாகாவை கம்யூனிசத்தைத் தர்குவதற்குப் பயன்படுத்தியதைப் போன்ற ஒரு காலகட்டத்தில் நாம்



பிரவேசித்திருக்கிறோம்" என போகஸ் சி.என்.என். தொலைக்காட்சிக்கு மே 07 ஆம் திகதி அளித்த பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

"இது 1930 களில் ஹிட்லர் செய்ததை சிறிது ஒத்திருக்கிறது. பெரும்பான்மையான மக்களுக்கு என்ன பிழை நடந்து கொண்டிருக்கிறது எனத் தெரியும். அவர்களுக்கு இது தவறு என்று தெரிந்த போதிலும், அவர்கள் இதற்கு எதிராக எழவோ அல்லது ஏதாவது கூறவோ இல்லை. பயமுறுத்தப்படுவோம் என அவர்கள் நினைக்கிறார்கள்" என அவர் குறிப்பிட்டார்.

தற்பொழுது அமெரிக்காவில் சீனா பற்றி யாராவது நியாயமாக ஏதாவது சொன்னால், அவர்கள் பயமுறுத்தப்படுவார்கள் என நினைப்பதுடன், அவர்களது தலைகள் வெட்டப்படும் எனவும் பயப்படுகிறார்கள். 30 களில் ஜேர்மனியில் இதுதான் நடந்தது. அமெரிக்காவில் உள்ள இதற்குப் பொறுப்பானவர்களோ, விசேடமாக ஜேர்மனியில் இதற்குப் பொறுப்பாக இருந்தவர்களோ எதுவும் பேச முடியாது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# தோழர் மிச்சேல் லூக்காஸ் அவர்களுக்கு புரட்சிகர அஞ்சலி!



**சோ**வியத் மக்களுக்கான கனடிய நண்பர்கள் சங்கத்தினதும் (இவ்வமைப்பு சோவியத் புரட்சிக்கு அடுத்த ஆண்டு 1918 இல் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது), சோவியத் மக்களுடன் ஒருமைப்பாட்டுக்கான சர்வதேச சங்கத்தினதும் நீண்டகால தலைவரும், அந்தச் சங்கத்தின் மாத வெளியீடான North Star Compass சஞ்சிகையின் (இது பல மொழிகளில் வெளியிடப்பட்டது) ஆசிரியரும், கனடிய கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்ட காலம் அங்கம் வகித்தவருமான தோழர் மிச்சேல் லூகாஸ் (Michael Lucas) அவர்கள் தமது 94 ஆவது (1926 – 2020) வயதில் 04 ஆம் திகதி ரொறன்ரோவில் காலமானார் என்ற செய்தி எங்கள் எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கிழக்கு ஸ்லோவாக்கியாவின் கார்பதியன் மலைப்பகுதி ஒன்றில் பிறந்த தோழர் லூக்காஸ் 1938 ஆம் ஆண்டு தமது 12 ஆவது வயதில் கனடாவுக்கு குடிபெயர்ந்தார். இளம் வயதிலேயே சோசலிசக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட அவர், கனடிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும், சோவியத் நட்புறவு அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். அவருக்கு உறுதுணையாக அவரது துணைவியார் தோழியர் ஹெலன் அவர்களும் கரம் கோர்த்தார்.

தோழர் லூக்காஸ் ஒரு மிகச் சிறந்த ஓவியரும், கலைத்துவமிக்க பக்க வடிவமைப்பாளருமாவார். அவர் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் கலை சம்பந்தமான முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

சோவியத் நட்புறவுக்கான பல சர்வதேச மாநாடுகளை கனடாவில் நடத்திய அவர் வருடந்தோறும் தவறாமல் சோவியத் புரட்சி தினத்தையும், பாசிசத்தின் மீதான வெற்றித் தினத்தையும் ஒழுங்கு செய்து வந்துள்ளார். பல தடவைகள் சோவியத் யூனியன், செக்கோஸ்சிலோவாக்கியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். உலகம் முழுவதும் முற்போக்காளர்களுடன் எப்பொழுதும் தொடர்பில் இருந்து வந்துள்ளார்.

கனடாவில் வாழும் இலங்கையர்கள் சிலரும் அவர் தலைமையிலான சோவியத் நட்புறவுச் சங்கத்தின் நிகழ்வுகளில் பங்குபற்றி வந்துள்ளனர். அவரது 90 ஆவது பிறந்த தினத்தின் போது 'இலங்கை இடதுசாரிகள் கூட்டமைப்பு (கனடா)' சார்பாக தோழர் லூக்காசை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, வாழ்த்துப் பத்திரம் வழங்கி அவரைக் கௌரவித்தது.

தோழர் லூக்காஸ் தமது அன்பு மனைவியையும், இரு பிள்ளைகளையும், சோவியத் நட்புறவுச் சங்கத்துக்கான மிகப் பெரிய சொந்தக் கட்டிடத்தையும் சொத்துக்களாக விட்டுச் சென்றுள்ளார்.

தமது வாழ் முழுவதையும் சோசலிச இலட்சியத்துக்காகவும், சோவியத் நட்புறவுக்காகவும் அர்ப்பணித்த ஒரு மாபெரும் தோழருக்கு எமது வணக்கத்தையும், புரட்சிகர அஞ்சலியையும் செலுத்தி நிற்கின்றோம்.

**நன்றி: முகநூல் - தோழர் மணியம்**

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

"தற்போது நடப்பவை மிக ஆபத்தானவை என நான் கவலைப்படுகிறேன். டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சி பொருளாதார ரீதியாக, குறிப்பாக கொரோனா வைரஸ் சம்பந்தமாக எதுவும் செய்யாத நிலையில், அதற்காக யாரையாவது குற்றம் சாட்ட வேண்டிய தேவையிருப்பதால் சீனா மீது குற்றஞ்சாட்டுகின்றனர்" என அவர் குறிப்பிட்டார்.

வாசிங்டனின் தற்போதைய நிலையை ஜேர்மனியின் 30 களின் நிலையுடன் ஒப்பிடுவது குறித்து போகஸ் அவர்களிடம் கேட்டபொழுது அவர், "நாங்கள் அந்தத் திசையை நோக்கி நகர்கிறோம் என நான் நினைக்கிறேன். ஏற்கெனவே அந்த நிலையை அடைந்துவிட்டோம் எனச் சொல்ல மாட்டேன். ஆனால் அமெரிக்காவிலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்கள் பல பேருக்கு சீன எதிர்ப்பு என்பது பொறுப்பற்றது எனத் தெரியும். இது தொடருமானால் நாம் அதற்கு ஒரு விலையைக் கொடுக்க நேரிடும்" எனக் கூறினார்.

போகஸ், ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2014 முதல் 2017 வரை சீனாவுக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்தவர். அதற்கு முதல் மொன்ரானா (Montana) பகுதிக்கான செனட்டராக 36 வருடங்கள் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறுமுகம் தொண்டமான் காலமானார்!

**இ**லங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தமது 55ஆவது வயதில் 26.05.2020 அன்று காலமானார்.

ஆறுமுகன் தொண்டமான் மலையக இந்திய வம்சாவளி பெருந்தோட்ட சமூகத்திற்காக அயராது உழைத்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மிகவும் அடக்கி ஒடுக்கப்படும் ஒரு சிறுபான்மை இனமாகவும், அதேவேளை மிகவும் கீழ்நிலை பாட்டாளி வர்க்கமாகவும் உள்ள மலையக மக்களின் தலைவர் என்ற வகையில், ஆறுமுகம் தொண்டமானின் மரணத்துக்கு 'வானவில்' தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

இழந்த நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையைப் பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான தலைவர்களோ, சம்பந்தன் தவிர, சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தேர்தல் வந்தால் வழமைப்பிரகாரம் தமிழ் தேசியவாதத்தை சற்று உணர்ச்சிகரமாக உரத்துப் பேசி மக்களின் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்ற கனவில் மூழ்கி இருக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேகம் போதாது என்று சொல்லி அதிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சிகள் அமைத்தவர்களின் நிலையும் அதுதான்.

இந்த நிலையில்தான் சுமந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பயணிக்க வேண்டிய மாற்றுவழி குறித்து அக்கறைப்படுகிறார். அவரது இந்த அக்கறை தனிநாட்டுக் கொள்கையையும் அதற்கான ஆயுதப் போராட்டத்தையும் நிராகரிப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய எந்தவொரு அரசாங்கத்துடனும் இணைந்து வேலை செய்வது வரை கூட்டமைப்பு பயணிக்க வேண்டும் எனவும் அவர் நினைக்கிறார். (இந்தத் தந்திரோபாயத்தில் ஈ.பி.டி.பி. கட்சியை அரசுகளிடமிருந்து ஓரம்கட்டும் மறைமுகத் திட்டமும் இருக்கிறது)

சுமந்திரன் இந்த விடயத்தில் கூடுதலான அக்கறை காட்டுவதற்கு காரணமும் இருக்கிறது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை மூத்தவரான சம்பந்தன் இருக்க மாவை சேனாதிராசா தலைவராக இருந்தாலும், அவரது பதவி சம்பிரதாயபூர்வமான பதவிதான். உண்மையில் தமிழரசுக் கட்சியை இயக்குபவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும்தான். தமிழரசுக் கட்சியின் தற்போதைய முடிவுகளை எடுப்பதில் சுமந்திரன் வகிக்கும் பங்கை கட்சியில் வேறு எவரும் வகிக்கும் நிலை இல்லை. எனவே, சம்பந்தனுக்குப் பிறகு சுமந்திரனே தமிழரசுக் கட்சியின் அதிகாரமிக்க தலைவராக வருவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆனால் சுமந்திரன் தமிழரசுக் கட்சியை அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு ‘மாற்றி’ அமைக்கப் போகிறார் என்பதே அடிப்படையான கேள்வியாகும். ஏனெனில் தமிழ் தலைமைகளின் மாற்றங்களை எடுத்துப் பார்த்தால், தலைமை மாற்றங்கள் காலத்துக்குக் காலம் நடந்து வந்தது உண்மைதான். ஆனால் கொள்கை மாற்றம் நடந்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் தமிழர்களின் ஒரேயொரு கட்சியாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி இருந்தது. பின்னர் அதிலிருந்து பிரிந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் உருவாக்கிய தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக இருந்தது. அதன் பின்னர் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி அ.அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர்களின் பிரதான கட்சியாக இருந்தது. தமிழ் மிதவாத தலைமையில் அதிருப்தி கொண்ட தமிழ் இளைஞர்கள் பல்வேறு ஆயுதப்போராட்ட இயக்கங்களை உருவாக்கினர். அவர்கள் மத்தியிலும் போட்டி ஏற்பட்டு இறுதியில் புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களை அழித்து தானே தனிக்காட்டு இராஜாவாக மாறியது. இறுதியில் புலிகளையும் இலங்கை அரசு அழித்த பின்னர், தமிழர்களின் மிதவாதத் தலைமை என்ற பெயரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது தமிழர்களின் பிரதான அரசியல் தலைமையாக இருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான இந்த 72 ஆண்டுகால வரலாற்றில் தமிழ் மக்களுக்கு ஆறு தலைமைகள் உருவாகியுள்ளன. ஆனால் இந்தத் தலைமைகளின் கொள்கைகளில் அடிப்படை மாற்றம் ஏதாவது ஏற்பட்டதா? ஒரேயொரு மாற்றம் என்னவென்றால், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவென முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராட்டம் நடைபெற்றது. ஆனால் ஏதாவது உருப்படியாகச் சாதிக்கப்பட்டதா? ஒன்றுமே இல்லை. அதற்கான காரணம் என்ன? இங்கேதான் தொடர் தோல்விக்கான அடிப்படை உண்மை பொதிந்து கிடக்கிறது.

முதலாவது, தமிழ் தலைமைகள் எல்லாமே தமிழ் மக்கள் மத்தியிலுள்ள உயர்ந்த சாதியைச் சேர்ந்த, நிலபுலமும் பணமும் படைத்த, ‘மெத்தப் படித்த’வர்களைக் (பிரபாகரன் நீங்கலாக) கொண்டதாகவே இருந்தது. இந்தத் தலைமை தான் பிரதிநிதித்துவப்படுத்திய பிற்போக்கு வர்க்கங்களின் நலன்களுக்காக வேலை செய்த அதேநேரத்தில், சாதாரண தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தமிழ் இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்துள்ளது.

இரண்டாவதாக, தமிழ் மக்களின் தேசிய – ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு சாதாரண சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான எந்தவொரு வேலையையும் தமிழ் தலைமைகள் செய்தது கிடையாது. அதேநேரத்தில் சிங்கள மத்தியிலுள்ள பெரும் செல்வந்த முதலாளிகளின் கட்சியான சிங்கள இனவாத பிற்போக்குக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே தமிழ் தலைமைகள் எப்பொழுதும் கூடிக்குலாவி வந்துள்ளன.

மூன்றாவதாக, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கையில் வாழ்கின்ற ஏனைய இன மக்களின் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக அந்நிய சக்திகளின், குறிப்பாக, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவைப் பெற்று இலங்கையைப் பிளவுபடுத்தி, தமிழர் பிரதேசத்தில் தனி அரசொன்றை நிறுவி, அதை ஏகாதிபத்திய நாடுகளின் ஒரு காலனியாக்கவே தமிழ் தலைமைகள் எப்பொழுதும் முயன்று வந்துள்ளன.

இவைதான் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் அகிம்சாவாதத் தலைமைகளினதும், ஆயுதப் போராட்டத் தலைமைகளினதும் மாற்ற முடியாத தொடர்ச்சியான கொள்கையாக இருந்து வந்துள்ளது. இந்தக் கொள்கைகளை மாற்றாதவரை தமிழ் மக்களின் வாழ்வில் ஒருபோதும் மாற்றம் ஏற்படப்போவதில்லை. தலைமை மாற்றத்தால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. அப்படிக்காண முடியுமென்றால் இந்த 72 வருட காலத்தில் 6 தலைமைகள் உருவாகி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே அடிப்படையான மாற்றம் கொள்கை மாற்றமாகவே இருக்க வேண்டும்.

இந்த நிலைமையில் சுமந்திரன் புலிகளையும் ஆயுதப் போராட்டத்தையும் மட்டும் விமர்சிப்பதால் மாற்றம் வந்துவிடப்போவதில்லை. அடிப்படையில் பிற்போக்கு தமிழ் இனவாதிகளாகவும், சிங்கள பிற்போக்கு இனவாத ஐ.தே.கவின் சகபாடிகளாகவும், ஏகாதிபத்திய விசுவாசிகளாகவும் இருந்துகொண்டு மாற்றம் கொண்டு வருவதென்பது, மாவை சேனாதிராசாவுக்குப் பதிலாக ஒரு சுமந்திரனைத் தலைமைக்கு கொண்டு வருவதாக மட்டுமே இருக்கும். இதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கப்போவதில்லை.

சுமந்திரன் புலிகளுக்கெதிராகவும், ஆயுதப் போராட்டத்துக்கு எதிராகவும் ‘விமர்சனம்’ செய்வதும், அதைக்கண்டு அவருக்கு எதிரானவர்கள் ‘சன்னதம்’ ஆடுவதும், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அடுத்தமுறை நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கான நாய்ச்சண்டையே தவிர வேறு ஒன்றுமல்ல என்பதே உண்மையாகும்.

# மே தினத்தின் புரட்சிகர வரலாறும் உணர்வும்

சர்வதேச பாட்டாளி வர்க்க தினமான மே தினம் தோன்றி இவ்வருடம் (2020) மே 01 ஆம் திகதியுடன் 134 வருடங்கள் ஆகின்றது.

இந்த மே தினம் தோன்றுவதற்கான நிகழ்வுக்கு கால்கோள் இட்டது 1886 இல் அமெரிக்காவின் சிக்காக்கோ நகர தொழிலாளி வர்க்கம் நடத்திய ஒரு புரட்சிகரப் போராட்டமாகும்.

1886 ஆம் ஆண்டு சிக்காக்கோ நகரில் உள்ள தொழிலாளர்கள் தாம் நாளொன்றுக்கு செய்யும் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கும்படி கோரி பொது வேலை நிறுத்தம் ஒன்றில் குதித்தனர். அந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக நகரிலுள்ள தொழிலாளர்கள் மே 04 ஆம் திகதி ஒரு பொது இடத்தில் ஒன்று கூடினர். அங்குள்ள முதலாளி வர்க்கத்தின் சார்பாகச் செயல்பட்ட நகர பொலிஸ் கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் இறங்கியது.

அந்தக் கட்டத்தில் 'இனம் தெரியாத' நபர் ஒருவர் குண்டொன்றை அந்த இடத்தில் வீசிவிட்டார். அதைத் தொடர்ந்து பொலிசார் அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இந்தச் சம்பவத்தில் ஏழு பொலிசாரும், நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டதுடன், சுமார் அறுபது பொலிசாரும், பல பொதுமக்களும் காயமடைந்தனர். அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர் தலைவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது 'விசாரணை' நடத்தப்பட்டு அவர்களில் நால்வருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அடுத்த நாள் மே 05 ஆம் திகதி Milwaukee Wisconsin என்ற இடத்தில் வேலை நிறுத்தக்காரர்கள் மீது அரச படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு பாடசாலை மாணவனும், தனது வீட்டு முற்றத்தில் கோழிகளுக்கு தீனி போட்டுக் கொண்டிருந்த ஒரு பொது மகனும் அடங்குவர்.

சிக்காக்கோவில் நடந்த இந்தச் சம்பவங்கள் உலகம் முழுவதுமுள்ள தொழிலாளி வர்க்கத்தின் கோபத்தைக் கிளறிவிட்டது. சிக்காக்கோ தொழிலாளர்களுக்கு ஆதரவாக உலகின் பல பாகங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.



*1909 ஆம் ஆண்டு நியுயோர்க் நகர மேதினப் பேரணி*

1889 இல் பிரான்சின் தலைநகர் பாரீசில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச அகிலத்தின் முதலாவது காங்கிரசைத் தொடர்ந்து ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் 1890 இல் சிக்காக்கோ போராட்டங்களின் நினைவு தினம் கொண்டாடப்படும் பொழுது உலகளாவிய ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும் என்ற ஆலோசனையை Raymond Lavigne என்பவர் முன்வைத்தார். 1891 இல் நடந்த அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் மே 01 ஆம் திகதியை தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச தினமாகக் அனுட்டிப்பது என உத்தியோகபூர்வமாக முடிவு செய்யப்பட்டது.

1894 இல் நடைபெற்ற மே தின நிகழ்வுகளின் போது பெரும் கலவரங்கள் ஏற்பட்டன. 1904 இல் நெதர்லாந்தின் தலைநகரான அம்ஸ்ரடாமில் நடைபெற்ற சர்வதேச சோசலிச காங்கிரஸ் ஒரு அழைப்பை விடுத்தது. அதில், "உலகம் முழுவதும் உள்ள சமூக ஜனநாயக கட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மே 01 ஆம் திகதியன்று சட்டபூர்வமாக எட்டு மணி நேர உரிமையைப் பெறுவதற்காகவும், தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உரிமைகளைப் பெறுவதற்காகவும், உலக சமாதானத்துக்காகவும் போராட்டங்கள் நடத்த வேண்டும். அத்துடன் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சகல நாடுகிளிலும் உள்ள பாட்டாளி வர்க்கம் மே 01 ஆம் திகதியன்று வேலை செய்வதை நிறுத்த வேண்டும்'' என கோரப்பட்டிருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை மே 01 ஆம் திகதி உலகத் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச போராட்ட தினமாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் காலகட்டத்தில் 1917 இல் லெனின் தலைமையில் ரஸ்யாவில் முதலாவது சோசலிசப் பரட்சி நடைபெற்றதிலிருந்து பல நாடுகளில் சோசலிசப் புரட்சிகள் நடந்தேறி வந்துள்ளன. உலக சோசலிச இயக்கம் பல ஏற்றங்களையும் இறக்கங்களையும் கண்ட போதிலும் சிக்காக்கோ தொழிலாளி வர்க்கம் ஏற்றி வைத்த புரட்சிகர உணர்வு அணையாத தீபமாக இன்றுவரை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

உலகம் உழைக்கும் மக்களுக்கே. சுரண்டும் வர்க்கம் தனது இறுதிப் பயணத்தை ஆரம்பித்துவிட்டது என்ற உணர்வை மே தின உணர்வு தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றது.

**மே தின உணர்வு நீடூழி வாழ்க!**
**பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வு நீடூழி வாழ்க!**
**வெல்லப்பட முடியாத மார்க்சிய – லெனினிய தத்துவம் நீடூழி வாழ்க!**